விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | கார்த்திகை 13 வெள்ளிக்கிழமை (29.11.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 345



இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோர் நெடுந்தீவிற்குவந்து இறங்குவதை முதலாவது படத்திலும், மக்களுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும், உண்ணாவிரதத்தில் பங்கு பற்றும் ஒரு பகுதி மக்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### அமைச்சர் மகேஸ்வரன் நெடுந்தீவு விஜயம்

# ஈ.பி.டி.பி வெளியேறும் வரை எமது போராட்டம் தொடரும்

## நெடுந்தீவு மக்கள் தெரிவிப்பு

(நெடுந்தீவில் இருந்து நமது நிருபர்கள் ஜெ.டானியல் கை.ஜெயகாந்தன்)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி அமைப்பினருக்கு எதிராகத் தொடருகின்ற போராட்டங்கள் குறித்தும், அங்குள்ள மக்களின் நிலைவரம் குறித்தும் அறிந்து கொள்ளும் பொருட்டு, நேற்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் தமிழ், சிங்களப் பத்திரிகையாளர்கள் குழுவொன்று நெடுந்தீவுக்குச் சென்றது.

இவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஆகியோரும் நெடுந்தீவுக்குச் சென்றனர்.

ஈ.பி.டி.பி அமைப்பினருக்கு எதிராக அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி போராட்டம் நடாத்தும் நெடுந்தீவுப் பகுதி மக்களை, இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அப் பகுதி மக்கள், தமது பாதுகாப்பிற்கு ஈ.பி.டி.பியினரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் ஈ.பி.டி.பியினரால் படுகொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள் என்பன மேற் கொள்ளப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

### பரு.பிரதேச செயலகம் முன்பாக
## நேற்று அடையாள மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்கக் கோரியும், படையினர் அப் பகுதியில் நிலை கொண்டிருப்பதைக் கண்டித்தும் நேற்றுப் பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக அடையாள மறியல் போராட்டம் இடம் பெற்றது.

(10ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி—பிரதமர் நேற்று சந்திப்பு
# புலிகளின் நீதி நிர்வாகத்தில் சர்ச்சை

# புலிகளின் நீதி நிர்வாகத்தில் சர்ச்சை



(நமது நிருபர்)


**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும்,பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையே முக்கிய சந்திப்பொன்று நேற்று மாலை ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.**

**ஜனாதிபதி மாளிகையில் நடை பெற்ற இச்சந்திப்பின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஒஸ்லோவில் நடை பெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாடு தொடர்பாக விளக்கிக் கூறியுள்ளார்.**

கடந்த 25ம் திகதி ஒஸ்லோவில் நடை பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு விளக்கமளிப்பதற்கு நேற்று மாலை ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றிருந்தார்.

ஜனாதிபதியுடனான இச் சந்திப்பின் போது பிரதமருடன் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் சென்றிருந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)



## ஒஸ்லோவில் அரசு–புலிகள் பேச்சு

# தமிழ்ச்செல்வன், கேணல் கருணா நேற்றுக் கொழும்பு பயணம்

(கிளிநொச்சி)

ஒஸ்லோவில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துற்றைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனும்,சிறப்புத் தளபதி கேணல் கருணாவும் நேற்றுக் தனித்தனியே உலங்கு வானூர்திகள் மூலம் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் இருந்தும் சிறப்புத் தளபதி கேணல் கருணா மட்டக்களப்பு பளுகாமம் மகாவித்தியாலயத்தில் இருந்தும் விமானப் படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்திகள் மூலம் கொழும்பு சென்றடைந்துள்ளனர்.

சு.ப.தமிழ்ச்செல்வனுடன் அவரது உதவியாளர்கள் மூவரும் கொழும்பு சென்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின்-

(10ம் பக்கம் பார்க்க)

# ஈபிடிபி வெளியேறும்என்ற பேச்சுக்கே இடமில்லை

## கட்சியின் அமைப்பாளர் ஜெகன்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து மட்டுமல்ல, வடக்குக் கிழக்கின் எந்தப் பகுதியில் இருந்தும் நாம் ஒரு போதும் வெளியேற மாட்டோம்.எதற்காக வெளியேற வேண்டும்?

இவ்வாறு ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வி.கே. குகேந்திரன்(ஜெகன்) கேள்வி எழுப்பினார்.

நேற்று நெடுந்தீவு சென்ற பத்திரிகையாளர்கள் குழு அங்கு தங்கியிருக்கும் ஜெகனைச் சந்தித்துக் கருத்துக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்குக் கிழக்குப் பகுதிகள் எமது பிரதேசம். எமது பிரதேசத்தில் இருந்து நாம் ஏன் வெளியேற வேண்டும்?

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல்

## இறைச்சிக் கடைகள்

## அறிவித்தல் - 01

நல்லூர் பிரதேச சபை

2003 ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2003 மார்கழி 31ம் திகதி வரையான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் கேள்விகள் 10.12.2002ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்குத் திறக்கப்படும். 05.12.2002 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். இது சம்பந்தமான நிபந்தனைகள் 30.10.2002 ம் திகதிய, வலம்புரி, 31 10.2002 ம் திகதிய உதயன் பத்திரிகைகளில் பார்வையிடலாம். அல்லது நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

| கொக்குவில் உப அலுவலகம் | மீளளிக்கப்படாத கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக்குறைந்த தொகை (வரிதவிர்ந்தது) |
|---|---|---|---|
| 1. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 350.00 | 5000.00 | 350000.00 |
| 2. பலாலி வீதி ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5000.00 | 100000 00 |
| 3. மஞ்சத்தடி மாட்டிறைச்சிக்கடை | 350.00 | 5000.00 | 126525.00 |
| 4. கோண்டாவில் வடக்கு, அரசடி வீதி மீன்சந்தை | 100.00 | 500.00 | 1061.00 |

# நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல் - 02

பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் (ICTAD) M-9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்தும், பொது நிறுவனங்களிடமிருந்தும் (நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட)கோரப்படுகின்றன.

இவ் வேலைத் திட்டங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் 29.11.2002 திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 04.12.2002 ம் திகதி புதன்கிழமை ந.ப 12.00 மணி வரை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும், சீல் வைத்த கேள்விகள் யாவும் 05.12.2002 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறும், தங்கள் கேள்விகளை கேள்விப் பத்திரத்தில் நிரப்பி ஒரு பிரதியை தலைவர், நல்லூர் பிரதேச சபை என விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் இட வேண்டும். மறு பிரதியை பி.உ.உ ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

அன்றைய தினம் பி.ப 2 30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. வேலை விபரம் | கேள்விவைப்புப் கட்டணம் | கேவிப்பத்திரக் கட்டணம் பெறுமதி சேர் வரி |
|---|---|---|
| 1. கோண்டாவில் கிழக்கு ச.ச. நிலையமும் இந்து இளைஞர் மன்றமும் மீளமைத்தல் | 500.00 | 300 00 |
| 2. கோண்டாவில் மத்திய கிழக்கு பொதுக் கிணறு புனரமைப்பு | 250.00 | 300.00 |
| 3. காளிகோவிலடி ச.ச. நிலையப் புனரமைப்பு | 1250.00 | 300 00 |
| 4. கொக்குவில் சரஸ்வதி ஆலை ஒழுங்கை திருத்தம் | 2000.00 | 300 00 |

# நல்லூர் பிரதேச சபை

## கூறுவிலை அறிவித்தல் - 03

எமது சபைக்கு கீழ்க் குறித்த வகையான போட்டோப் பிரதி இயந்திரம் தேவையாகவுள்ளது. தகுதிவாய்ந்த வழங்குநர்கள் தங்களது கூறுவிலைகளை (பொருளை தலைமை அலுவலகத்தில் கொண்டுவந்து ஒப்படைப்பது வரையான செலவு உட்பட) அரக்கு முத்திரையிட்ட உறையினுள் உள்ளடக்கி 15.12.2002 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "தலைவர் நல்லூர்பிரதேச சபை திருநெல்வேலி" என்ற முகவரிக்கு நேரிலோ தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

போட்டோப்பிரதி இயந்திர விபரம்

Canon NP- - 1215 - 01 (ஒன்று)

க.மணிபல்லவராஜன் (ஜே.பி,யு.எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
28 11.2002

(சி5371)

கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத்தில்

# மாவீரர் தின நிகழ்வுகள் சிறப்பாக அனுஷ்டிப்பு

(துன்னாலை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நேற்று முன்தினம் மாவீரர் தினநிகழ்வு மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சங்கத்தலைவர் தருசிதம் பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கச்செயலாளர் பு.இராதாகிருஷ்ணன் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார் தேசியக் கொடியை பொதுமுகாமையாளர் செ.கெங்காதரன் ஏற்றி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது தொடர்ந்து நினைவுரைகளும் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரையும் ஒலி பரப்புச் செய்யப்பட்டது.

இதேவேளை வடமராட்சியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது அங்கு யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் மா: நடராஜசுந்தரம், குமுதினி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள், கரணவாய் நாச்சிமார் கோவிலடியில் இருந்து பாண்ட் வாத்தியங்கள் முழங்க எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாவீரர் இல்ல நுழைவாயிலில் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா, வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாரதி, பரப்புரைப் பொறுப்பாளர் தீபன் ஆகியோர் மாவீரர்களின் பெற்றோரை வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை ஒலிபரப்பப்பட்டது அதையடுத்து துயிலும் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

(து- 41- 23)

# 3ஆம்கட்டப் பேச்சில் கடல் விவகாரங்கள் விரிவாக ஆராயப்படும் கேணல் சூசை தெரிவிப்பு

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறும் முதலாம் சுற்றின்மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது கடல்சம்பந்தமான விடயங்கள் குறித்துவிரிவாக எடுத்துக் கூறப்படும் என்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தனியார் செய்தி நிறுவனமொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடற்புலிகளின் பயிற்சிகள் போக்குவரத்து எல்லை போன்றவிடயங்கள் குறித்து இந்த ப்பேச்சுவார்த்தையில் தங்கள் தரப்பினர்விரிவாகப் பேச இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உபகுழுக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல் போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்படல் ஆகியவற்றின் அவசியத்தையும் அவர் இப்பேட்டியில் தெளிவுபடுத்தியுள்ளார்.

(உ-4)

# மனநோயாளி தற்கொலை

பருத்தித்துறைப் பகுதியில், மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற.இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவரான ஆதாம் தோமஸ் (வயது 59) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று நண்பகல் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரண விசாரணை இடம்பெற்றது.

மரண விசாரணை நடத்திய வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி கிருபாகரசூரியன், குரல்வளை நசியுண்டதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

கடந்த 18வருடமாக மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த பிரஸ்தாப நபரை அவரது மனைவி வைத்தியசாலைக்குக் கொண்டுவர முற்பட்டபோதே சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த. 14)

# இராசி பலன்

29-11-2002
(கார்த்திகை 13,வெள்ளி)
தசமி பி.இ12.46வரை
உத்தரம்மு இ 7.16வரை
இராகுகாலம் 10.43-12 13
நல்லநேரம் 6.13-7 43
சித்தா மிர்தம்

**மேடம்**
காரியஅனுகூலம், செய்தொழில்முன்னேற்றம், உடல்நலம், சத்துருஜெயம்

**இடபம்**
ரோகநிலை, காரியசித்தி, வியாபாரமேன்மை, கற்பனை மிகுதி

**மிதுனம்**
உடல்சோர்வு, தாய்வழி உறவு,கடுமையான முயற்சி, கல்விச்சிறப்பு

**கடகம்**
அந்நியர்சந்திப்பு, தனவரவு, மனமகிழ்ச்சி, தெய்வசிந்தை

**சிங்கம்**
வாக்குவாதம், சலிப்புத்தன்மை,உறவினர்உதவி, தனவிரயம்

**கன்னி**
தெய்வதரிசனம், பெரியோர்ஆதரவு, பொருள்சேர்க்கை,போசனசுகம்

**துலாம்**
உணர்ச்சிவசப்படல், அதிகயோசனை, காரியஅலைச்சல், சுபசெலவு

**விருச்சிகம்**
கடவுள்வழிபாடு, தனலாபம், முயற்சிகைகூடும், கௌரவம்

**தனுசு**
இலட்சுமிகரம்,கடும்முயற்சி நல்லசம்பவம், அதிகாரம்

**மகரம்**
வயிற்றுக்கோளாறு,கருமங்கள் தாமதமாகும், உத்தியோகத்தர்நன்மை, திடீர்பயணம்

**கும்பம்**
போசனசுகம். வேலைக்கஷ்டம், பிறர்மனஸ்தாபம், பிரயாணபயம்

**மீனம்**
காரியஅனுகூலம், குடும்பத்தில்மகிழ்ச்சி, தெய்வதரிசனம் பொருள்சேர்க்கை

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பேருந்தில் கள்வர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பில் இருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நோக்கி வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணம் செய்த பெண்ணின் இரண்டு பவுண் தங்கச் சங்கிலியும் ஆயிரத்து 600 ரூபா பணமும் களவாடப்பட்டுள்ளது.

பயணம் செய்த வேளை தனது கைப்பையில் தங்கச் சங்கிலி மற்றும் பணம் என்பவற்றை வைத்திருந்ததாகவும் யாழ்ப்பாணத்தில் இறங்கிப் பார்த்தவேளை அவற்றைக் காணவில்லை எனவும் பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார். (உ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் 2003/2004 கல்வியாண்டில் சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணிகற்கை நெறிக்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

5 வருடங்கள் கொண்ட இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 2002 ஆம் ஆண்டு கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல், இரசாயன வியல், பௌதிக வியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பொதுச்சாதாரண வினாத்தாளில் 30 வீதத்திற்குக்குறையாத புள்ளிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன், சற்ஸ்கோர் புள்ளிகள் உள்ளடங்கலாக பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையையும்பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக் கழக சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது யாழ்.பல்கலைக் கழக மக்கள் வங்கிக் கிளையிலோ பெற்று உதவிப் பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு16,12 2002 இற்கு முன்னதாகவிண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சம்பள ஆணைக்குழுத் தலைவர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகபாராளுமன்றக் குழுக்களின் பிரதிப் தலைவர் ஸ்ரீ சந்திரா கென்னடி நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்வார்;

இந்த விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எழுப்பிய வினா ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்விபரத்தை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி ஆற்றிய உரையையமையமாக வைத்தே இவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது; (உ-8)

## ஆறுமுக நாவலர் குரு பூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் குருபூசை எதிர் வரும் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மண்டபத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

# யாழ். வீரர்கள் தேசிய அணியில் இடம்பிடிக்க

# பாடசாலை மட்டத்திலேயே தளம் வேண்டும்

**தி. ஜெகநாதன்**
பணிப்பாளர், யாழ்- கிரிக்கெட் அக்கடமி

யாழ்ப்பாணத்தில் துடுப்பாட்டம்(கிரிக்கெட்) கல்லூரி மற்றும் கழக மட்டங்களில் சிறப்பாக விளையாடப்பட்டு வருகின்றது. மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் நடைபெறும்துடுப்பாட்டப்போட்டிகளில் களத்தடுப்பிலும், துடுப்பெடுத்தாடுவதிலும் பந்துவீச்சிலும் சாதனைகள் பலபுரிந்த விளையாட்டு வீரர்கள் குடா நாட்டு அணிகளில் இல்லாமலில்லை துடுப்பாட்டத்தின் மீது அவர்களுக்குரிய ஈர்ப்பும் ஈடுபாடும் இதற்கான காரணங்களாகும்.

2001 ஆம் ஆண்டு 17வயதின் கீழ் தேசிய குழுவிற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 வீரர்கள் முதல்சுற்றில்தெரிவாகினர். இரண்டாவது இறுதித் தெரிவில் யாழ் மத்திய கல்லூரி 17 வயதின் கீழ் அணியினராக றோகானும் தேசிய குழுவில் இடம் பெற்றனர்.

### யாழ். அணி

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 6 வீரர்களைக் கொண்ட 19 வயதின்கீழ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் தொடர்ந்து 3 முறை வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற கொழும்பு நாலந்தாக் கல்லூரி அணியை யாழ். அணி வென்று இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இவ்வாட்டத்தில் யாழ். அணியைச் சேர்ந்த லவேந்திரா லொயிட் அகிலன் விளையாடியிருக்கிறார்கள்.

இதேவேளை யாழ். பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தின் தெரிவின் அடிப்படையில் செல்வன் லவேந்திராவும், செல்வன் லொயிட்டும் வடக்கின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கான பாட்டா நிறுவனத்தின் பரிசுகளைப்பெற்றனர். இவர்கள் இருவரும் முதலாம் தவணையில் 19 வயது கீழ்ப்பட்டோர்க்கான போட்டிகள் நடைபெற்றிருந்தால், இவர்கள் 19 வயதின் கீழ் தேசிய அணியில் இடம் பெற்றிருக்கலாம்.

என்றாலும், இன்றுள்ள சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில துடுப்பாட்டத்தை எதிர்காலத்தில் தாக்குப் பிடிக்கப் போகும் பாடசாலைத் துடுப்பாட்ட அணிகள் துடுப்பாட்டக் கட்டுப்பாட்டுச் சபை எதிர்பார்க்கும் அளவுகோல்களுக்கு அமையத்தம்மைமாற்றிக் கொண்டால்தான்தேசிய மட்டப் போட்டிகளுக்குள் நுழைவதுடன் காலப்போக்கில் எமது வீரர்கள் தேசிய அணியில் இடத்தையும் பிடித்துக்கொள்ள முடியும் இந்த இலங்கை எமதுவீரர்களால் எட்டமுடியுமா என்ற நிதர்சனமான உண்மை எம்மைச் சுடுகிறது ஆனால் இதற்கான தளம் பாடசாலை மட்டத்திலேயே இடம்பெற வேண்டும்.

விளையாட்டைப்பொறுத்தவரை துடுப்பாட்டத்தில்தரம் உயர்ந்து வரும் போது எம்மால்தேசியயில்அணியில் இடம் பிடிக்க முடியாமல் போய்விடுகிறது மற்றபடி, கொழும்பில் பிறந்துவளர்ந்த ஒரு தமிழ் இளைஞர்தேசிய அணியில் ஆடும்போது அவர்முத்தையா முரளிதரன் எமது மண்ணைச் சேர்ந்தவர் என்றுசொல்வதில் பெருமை காண்கிறோம். இந்நிலை மாற வேண்டும்;

### இரண்டாவது தவணையில் சந்தர்ப்பமிழப்பு

யாழ்ப்பாணத்தில் 2 ஆம் தவணைக்குள் நடைபெறும் 19 வயதின் கீழ் துடுப்பாட்டப் போட்டிகள் எமது வீரர்களின் எதிர்காலத்தை, எட்ட முடியாதபடி அமைகிறது; சிறிலங்காவில் மொத்தம் 21 மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 19 வயதின் துடுப்பாட்டம் பாடசாலை 2 ஆம் தவணையில் நடைபெறுகின்றது. வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட முறை 2001 இல் தான் 2 ஆம் தவணைக்கு மாற்றப்பட்டது.

சிறிலங்கா துடுப்பாட்டக் கட்டுப்பாட்டுச் சபை 19 வயதின் கீழ் தேசிய துடுப்பாட்ட வீரர் குழுவிற்கான தெரிவை ஒவ்வொரு வருடமும் மார்ச் இறுதியில் நடத்துகின்றது; யாழ்ப்பாணத்தில் 2 ஆம் தவணையில் 19 வயதின் கீழ் துடுப்பாட்டத்தை நிரல் படுத்துவதால் தெரிவில் யாழ். மாவட்ட வீரர்கள் பங்கு கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்; மாறாக முதலாம் தவணையில் இடம்பெற்றால் 19 வயதின் தேசிய அணியில் யாழ். வீரர்கள இடம் பெறும் அனுகூலம் உண்டு. இவ் வகையில் செல்வன் லவேந்திரா, செல்வன் லொயிட் ஆகியோர் 19 வயதின் கீழ் தேசிய குழுவில் இடம்பெற்றிருக்கலாம். சிறந்த வீரர்கள் இதனால் நல்ல சந்தர்ப்பங்களை இழக்கின்றனர்.

### (க.பொ.த) உயர்தரம் பரீட்சை தடை

முதலாம் தவணையில் துடுப்பாட்டப் போட்டிகளில் ஈடுபடும் காலத்தைக் க.பொ.த (உயர்தரம்) தேர்வுக்குத் தயார் செய்வதில் செலவிடலாம், என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது; முதலாம் தவணையில் விளையாடினால் இவ்வாறுதான் நிகழும் என்ற எண்ணத்தில் உந்துதலால் இப் பேர்பட்ட கருத்துக்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

மேலும் யாழ்ப்பாணத்தில் 19 வயதின்கீழ் அணியில்ஒரு சிலரே க. பொ. த (உயர்தரம் பரீட்சைக்குத் தோற்றக் கூடியவர்கள் விளையாட்டு படிப்பைப் பாதிக்கும்என்று நமக்கு ஊட்டப்பட்டுள்ளகண்ணோட்டத்தில் விடயத்தை அணுகாமல் பார்த்தால்ஆரம்பக்கல்வியிலிருந்தே விளையாட்டின் கல்வியும், கல்வியில் விளையாட்டும் பிரிக்கமுடியாமல் கலந்திருப்பதுதெரியும எனவே எதிர்காலத்தில் உறுதி கொண்டு விளையாட்டுடன் படிப்பில் கவனம்செலுத்தினால் படிப்பில் நல்ல பெறுபேறுகளைப் பெறலாம்என்பதைக் கல்வியாளர் அறிவார்.

ஒருகாலத்தில் பாடவிதானத்திற்குப் புறம்பானது என்று கருதப்பட்ட விளையாட்டு இன்று பாடவிதானத்தோடு இணைந்த செயற்பாடாகக் கருதப்படுகிறது இந்தநிலைமையில் இன்றைக்கு பரீட்சையில் நல்ல பெறுபேறுகளுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கும் மாணவர்களுக்கு விளையாட்டுத்தடையாகஇருந்துவிடுமா?

அதிசிறந்த பாடசாலை வீரர்கள் யாழ். பல்கலைக் கழக அணியில் முதன்மையான இடங்களை வகிப்பதை அவதானிக்கும் பொழுது விளையாட்டுத்துறை கல்விக்கு ஊன்றுகோலாக அமையும்என நம்புகின்றோம்.

### யாழில்- கிரிக்கெட்துறை வளர்ச்சி

மற்றும்படி விளையாட்டில் தேசிய மட்டத்தில் சாதனைகள் நாட்டியிருப்பின் பல்கலைக் கழக நுழைவு மற்றும் தொழில் வாய்ப்புகளிலும் சலுகைஉண்டு என்பதை நாம் மனதில் கொள்ளுதல் விரும்பத்தக்கது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் சென். பீற்ரேஸ் கல்லூரி அணிகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் தமக்கிருக்கும் அனுபவத்தின் பின்னணியோடு 'யாழ்ப்பாணத்தின் 19 வயதின் கீழ் துடுப்பாட்டத்தை டிசெம்பர், ஜனவரியில் ஆரம்பித்தால், மார்ச் இறுதியில் இடம்பெறும் 19 வயதின் கீழ் தேசிய குழுத் தேர்வில் பங்கு பற்ற வாய்ப்பாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில்கிரிக்கெட் விளையாட்டுத் துறையை வளர்ப்பதற்கு பாடசாலைகளின் பங்களிப்பே மிக முக்கியமானது. வருடம் தோறும் இந்த விளையாட்டை வளர்ப்பதற்கு லட்சக் கணக்கில் பணம் செலவிடப்படுகிறது. எனவே எமது துடுப்பாட்ட வீரர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கான மாற்றுத் திட்டங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் யோசிக்க வேண்டும்.

## நிரந்தர நியமனம் வழங்காமைபற்றி ஊழியர் கவலை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பதினைந்துக்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் கடமையாற்றுவதாகத் தெரியவருகின்றது.

மேற்படிச் சங்கத்தில் தற்காலிக ஊழியர்கள் ஒரு வருடம் தொடக்கம் மூன்று வருடங்கள் வரை கடமையாற்றுபவர்கள் இருக்கின்றார்கள் என்றும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை குறித்து அதிருப்தி நிலவுவதாகவும் தெரியவருகின்றது. (பி-75)

# மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனிக்கட்டி ஆலை

## அமைப்பதெனத் தீர்மானம்

(திருநெல்வேலி)

கடற்றொழில் அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஓர் பனிக்கட்டி ஆலையும் இறால் மீன் பதனிடும் தொழிற்சாலையும் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் வி. ப. வேலாயுதப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் பல்வேறு துறைசார்ந்த பிரதிநிதிகளும கலந்து கொண்டனர். இதில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன,

- முள்ளியான் பகுதியில் ஏற்கனவே இயங்கிவந்த மருந்தகம் மீள இடங்குவதற்கு ஆவன செய்யப்படல்,
- பருத்தித்துறையில் தற்போது இயங்கி வரும் மருதங்கேணி கல்விக் கோட்டம் மருதங்கேணியில் மீள இயங்குதல்;
- இப்பகுதியில் சேதமடைந்துள்ள வீதிகள் பாலங்கள் போன்றவற்றைத் திருத்தியமைத்து இதனால் மக்கள் அனுபவிக்கும் அன்றாட சிரமங்களைத் தீர்ப்பதற்கு உரிய அதிகாரிகளை விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுதல்
- மேற்படி அரசாங்க அதிபர் பிரிவினை பிரதேச செயலர் பிரிவாக தரமுயர்த்தலும் இப் பணிமனைக்கென தனியான கட்டடம் அமைத்தலும்
- அழிந்த நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் மருதங்கேணி பொதுச் சந்தையின் திருத்த வேலைகளை உடன் மேற்கொண்டு சந்தை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- இப் பிரதேசத்திற்கு ஒரு சனசமூக நிலைய உத்தியோகத்தரை நியமித்தல்,
- பனை, தென்னைவள தொழிலில்ஈடுபடுகின்றதொழிலாளர்களின் நன்மை கருதி வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கென ஒரு தனியான பனை. தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (உ-43)

## வீதியை செப்பனிட கோரிக்கை

(சுதுமலை)

நவாலி வடக்குப் பகுதியில் உள்ள குதனை வீதி பலவருடகாலமாகத்திருத்தம் செய்யப்படாமல் குன்றும், குழியுமாக உள்ளது என இப்பகுதி மக்களால் வலி-தென்மேற்கு பிரதேசசபை (மானிப்பாய்) செயலருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக இவ்வீதியால் போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு சேதம் அடைந்துள்ளதென்றும் விரைவில் நல்லமுறையில் இவ் வீதியை செப்பனிட்டு தரும்படியும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது

(பி-252)

ஈராக்கில் ஆயுதப் பரிசோதனை

# முதல் நாள் பணி தடங்கலின்றி நடந்தேறியதாக அறிவிப்பு


(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் பரிசோதகர்கள் ஈராக்கில் தமது முதல நாள் பரிசோதனைகளை எதுவித தடங்கலுமின்றி நடத்தி முடித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

அதிபர் சதாம் ஹீசைனின் அரசு ஈராக்கில் பல்வேறு விதமான அழிவாயுதங்களை ஒளித்து வைத்திருப்பதாக மேற்கு நாடுகள் சந்தேகப்படுவதால் அங்கு ஆயுதங்களைப் பரிசோதிப்பதற்காகப் பாதுகாப்புச் சபை நிறைவேற்றிவிட ஒரு தீர்மானத்தின் பிரகாரம் இந்த ஆயுதப்பரிசோதனைக் குழு அங்கு சென்றுள்ளது.

ஈராக்கில் ஐக்கிய நாடுகள் பரிசோதனைக் குழுவினர் மேற்கொண்ட முதல்நாள் பரிசோதனை தங்குதடைகள் ஏதுமின்றி முடிவடைந்துள்ளதென, ஆயுதப்பரிசோதனைக் குழுவின் முக்கிய பரிசோதகர் நேற்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கடந்த 4வருடங்களின்பின் ஐக்கிய நாடுகள் சபையின் புதிய தீர்மானத்தை ஈராக் அங்கீகரித்த பின்னர் ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் பக்தாத் சென்றிருந்தனர். அங்கு நேற்றுமுன்தினம், அவர்கள் இரண்டு பிரதான இடங்களில் முதல்நாள் பரிசோதனையை மேற்கொண்டனர். இந்தப் பரிசோதனையின் போது எதுவித தடைகளும் இன்றி பரிசோதனை முடிவடைந்துள்ளது. இதற்கான முழு ஒத்துழைப்பினை ஈராக் வழங்கியுள்ளதெனவும், அடுத்த கட்டமாக இரண்டாம் நாள் பரிசோதனைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)



இத்தாலியின் சிஸ்லி நகரில் உள்ள மவுண்ட் எட்னா எரிமலையில் இருந்து நெருப்புக் குழம்பு இன்னும் வெளிவந்து கொண்டே இருக்கிறது. இந்த நெருப்புக் குழம்பானது மக்கள் வசிக்கும் நகரங்களுக்குள் வராதவாறு புல்டோசர் வாகனங்களைக் கொண்டு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

# மிகச் சிறந்த பிரிட்டிஷ் பிரஜை சேர்ச்சில்

## பி.பி.ஸி கருத்துக்கணிப்பில் தெரிவு

(லண்டன்)

மிகச்சிறந்த பிரிட்டிஷ் பிரஜையாக முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பி.பி.ஸி தொலைக்காட்சி நிறுவனம் பிரிட்டனில் மிகச் சிறந்த பிரஜையை தெரிவு செய்வதற்காக நடத்திய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 447,423 வாக்குகளைப் பெற்று முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் முதலாமிடத்தையும் 391,423வாக்குகளைப் பெற்று பொறியியலாளர் இஷம்ற்றா கிங்டன் புருனஷ் இரண்டாம் இடத்தையும் 222,055வாக்குகளுடன் இளவரசி டயானா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இவர்களையடுத்து, சாள்ஸ்டாவின, வில்லியம் ஷேகஸ்பியர், ஐசாக் நியூட்டன், முதலாம் எலிச பெத்ராணி, பொப் பாடகர் ஜோன் லெனன் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்துக் கணிப்பானது மின்அஞ்சல், தொலை பேசி ஆகியவற்றின் மூலமே கணிக்கப்பட்டதாகவும் பி.பி.ஸி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வினஸ்டன் சேர்ச்சில் 2ஆம் உலக யுத்தத்தின் போது நெஞ்சழுத்தத்துடன் பிரிட்டனைக் கொண்டு நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

## தூதரகங்கள் மூடப்பட்டன

(மணிலா)

பிலிப்பைன்ஸில் இயங்கிவந்த தங்களது தூதரகங்களைக் காலவரையறையின்றி உடனடியாக மூடிவிடும்படி அவுஸ்திரேலியாவும் கனடாவும் அறிவித்துள்ளன.

அத்துடன் பிலிப்பைன்ஸிற்கு அத்தியாவசியமற்ற பயணங்களையும் தற்காலிகமாக நிறுத்திவிடுமாறும் இருநாடுகளும் தங்களது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளன.

இஸ்லாமியத்தீவிரவாதிகள் பிலிப்பைன்ஸ் மீது தாக்குதல் நடத்தப் போவதாக அச்சுறுத்தியுள்ள இரகசியத்தகவல் கிடைத்ததையடுத்தே இந்த முடிவை இருநாடுகளும் மேற்கொண்டுள்ளன.

# ஊடுருவும்தீவிரவாதிகளைக் கண்டறியும் கருவிகள்

இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கும்

(புதுடில்லி)

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவும் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் முயற்சி பற்றி எச்சரிக்கை செய்யும் சமிக்ஞைக் கருவிகளை அமெரிக்கா மிக விரைவில் இந்தியாவுக்குத் தருவதாக உறுதி கூறியுள்ளது என்று இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் பிளைக்மில் தெரிவித்துள்ளார்.

இந்தியா கடந்த சில வாரங்களுக்கு முன், ஊடுருவலாளர்களின் முயற்சிகளைக் கண்டறியும் சமிக்ஞைக் கருவிகளைத் தந்துதவுமாறு அமெரிக்காவிடம் கோரிக்கை யொன்றை விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கையினைத் தற்போது ஏற்றுக் கொண்டுள்ள அமெரிக்கா மிகவிரைவில் அக் கருவிகளைத் தந்துதவுவதாகவும், அத்துடன் ஆயுதங்களைக் கண்டறிய உதவும் ராடர்க் கருவிகளையும் இந்தியாவுக்குத் தந்துதவுவதாகவும் உறுதியளித்துள்ளது.

இவ்வாறு செயற்படும் கருவிகள் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான எல்லையின் முக்கிய இடங்களில் பொருத்தப்படவுள்ளது என்றும் இந்திய தரப்புச் செய்திகள் கூறின. (பி-2)

WORLD NEWS உலக தரிசனம்


# பொடாசட்டம் தவறாக பயன் படுத்தப்பட்டது

பாரதிய ஜனதா தலைவர் கண்டனம்

(புதுடில்லி)

வை.கோ கைது விடயத்தில் பொடாசசட்டம் பயன்படுத்தப்பட்டது குற்றத்திற்குரிய விடயம் என்று அகில இந்தியப் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு கடுமையாகக் கண்டித்துள்ளார்.

நாட்டிலுள்ள பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே பொடாச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனை அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளது என்று அவர் கூறினார்.



வேலூர்ச் சிறையில் இருக்கும் வை.கோ வைச்சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வெங்கையா நாயுடு இக்கருத்தை தெரிவித்துள்ளார்.(பி-2)

## கொளத்தூர் மணி பிணையில் விடுதலை

(சென்னை)

கொளத்தூர் மணிக்குக் கர்நாடக உயர் நீதிமன்றம் நேற்று நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கியுள்ளது.

வீரப்பன் பிடியிலுள்ள நாகப்பாவை மீட்பதற்கு கொளத்தூர் மணியைத் தூதுவராக அனுப்பி வைக்க வேண்டும் என்ற வீரப்பனின் நிபந்தனையையடுத்தே கொளத்தூர்மணி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (பி-2)



அமெரிக்காவில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்தில், ஒலியின் வேகம் குறித்து நடத்தப்பட்ட ஆய்வின் போது எடுக்கப்பட்ட காட்சி இது. ஒரு மாதத்திற்கு முன் நடைபெறுவதாக இருந்த இந்த ஆய்வு வானிலை சரியில்லாத காரணத்தினால் கடைசி நிமிடத்தில் நிறுத்தப்பட்டது.

## பாக். புதிய அரசுக்கு பெரும் நெருக்கடி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த முக்தாகிதா கௌமி என்ற கட்சி கூட்டணியிலிருந்து விலகிக் கொண்டதையடுத்து பிரதமர் மிர் சபுல்லாகான் ஜமாலின் அரசியல் எதிர்காலம் பெரும் கேள்விக் குறியாகியுள்ளது.


கராச்சியில் சில பிரதேசங்களின் அதிகாரம் தொடர்பான விடயத்தில் தம்முடன் புதிய அரசாங்கம் சாதகமான முறையில் நடந்து கொள்ளவில்லையென்று கூறியே முக்தாகிதா கௌமிக்கட்சி புதிய அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளது. எதிர்க் கட்சிகளின் வரிசையில் அமரப்போவதாகவும் அது தெரிவித்துள்ளது,

இதனையடுத்தே, பிரதமர் மிர்சபுல்லாகான் ஜமாலின் அரசியல் எதிர்காலம் பெரும் கேள்விக்குறி யாகிவிட்டதென அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள். (பி-2)

---

(7ஆம் பக்கத்தொடர்ச்சி)

(உ) தரப்பட்ட படம் தாவரத்தண்டு ஒன்றின் ஒரு பகுதியை மட்டும் காட்டுகிறது.





i) A,B பகுதிகளை இனங்கண்டு பெயரிடுக?
ii) A,Bயின் தேவை பற்றி விளக்குக?
iii) தரப்பட்ட தாவரத்தண்டு ஒருவித்திலைக்குரியதா?

(ஊ) iii) அல்லது இரு வித்திலைக்குரியதா? உமது தெரிவுக்கான காரணத்தை தருக?
iv) இத்தாவரத்தின் இலையில் காணப்படும் காவற்கலத்தின் அமைப்பை படம் வரைக?

(எ) தாவரத்தின் வேர் மயிர்கள் மூலம் நீரும், கனியுப்பும் எவ்வாறு அகத்துறிஞ்சப்படுகின்றது?

09. புவிக்கோளத்தில் உயிரின் இடைத்தொடர்புகள் நடைபெறும் வரையறுக்கப்பட்ட பிரதேசம் உயிர்க்கோளம் எனப்படும்.
i) உயிர் கோளத்தில் நிலவும் ஒழுங்கமைப்பு மட்டங்கள் எவை?
ii) உயிர் அங்கிகட்கு இடையே காணப்படும் நெருக்கமான தொடர்பு உணவு வலையாகும். இதில் முதல் இணைப்பாகவும், இரண்டாம் இணைப்பாகவும் காணக்கூடிய அங்கி எத்தகைய போசனை முறையைக் கொண்டிருக்கும்.
(ஆ) 4 இணைப்புக் கொண்ட மணல் கடற்கரையில் காணப்படக்கூடியஉணவுச் சங்கிலியொன்றை எழுதுக?
iii) குறித்தவொரு சூழலில் காணப்படும் அங்கிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றினது உயிர்த்திணிவு ஆகியன கீழே தரப்பட்டுள்ளது.

| அங்கிவகை | எண்ணிக்கை(A) | ஒருஅங்கியின் திணிவு | உயிர்த்திணிவு AxB |
|---|---|---|---|
| பறவைவகை | 1 | 250 | 250 |
| நத்தை | 300 | 50 | 15000 |
| தாவரவகை | 30,000 | 20 | 60,000 |

iv. (அ) உயிர்த்திணிவு என்பதனை விளக்குக?
(ஆ) அட்டவணையில் உள்ள தகவலைப்பயன்படுத்தி
(a) எண்கூம்பகம் (b) உயிர்த்திணிவுக் கூம்பகம் ஒன்றையும் வரைக?
v. (அ) இயற்கைச்சூழலின் சமநிலை என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) இயற்கை வட்டங்களின் நிலவுகைக்கு நுண்ணங்கிகள் பங்களிப்பை உதாரணம் மூலம் விளக்குக?
(இ) இயற்கைச் சூழலின் சமநிலையை குழப்புவதில் செல்வாக்கு செலுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக?
vi) இலங்கையில் காணப்படும் ஊன் உண்ணித் தாவரங்கள் இரண்டைப் பெயரிடுக?
vii) பின்வரும் தாவரங்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப கொண்டுள்ள இசைவாக்கத்தைத் தருக?
(அ) சணல் (ஆ) கண்டல் தாவரம் (இ) லேராந்தஸ்

10. சில நோயாளிகட்கு வைத்தியர் வழங்கிய அறிக்கையொன்றின் தொகுப்பு கீழே காட்டப்படுகிறது.

| நோயாளி | WBC | குருதியமுக்கம் | ESR mm | ஈமோகுளோபின் g/100ml | குளுக்கோசு g/100ml |
|---|---|---|---|---|---|
| P | 8600 | 120/80 | 15 | 15.5 | 90 |
| Q | 32000 | 160/110 | 100 | 17.5 | 94 |
| R | 9000 | 120/80 | 20 | 16 | 90 |
| S | 14000 | 120/90 | 6 | 16 | 160 |

i) இதில் எவ்வித நோய்த்தாக்குக்கும் ஆளாகாதவர் என எவரைக் கருதுவீர்?
ii) இலுக்கோமியா நோயால் பாதிக்கப்பட்டவர் என எவரைக் கருதுவீர்?
iii) உயர்குருதி அமுக்கத்தால் பீடிக்கப்பட்டவர் என எவரைக் கருதுவீர்?
iv) கயரோகம் போன்ற நோய் பீடிக்கப்பட்டவர் என எவரைக் கருதுவீர்?
v) நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர் என எவரைக் கருதுவீர்?
vi) குருதியில் காணப்படும் உணவுக் கூறுகளில் ஒன்று குளுக்கோசு ஆகும்.
(அ)குளுக்கோசின் சூத்திரத்தை எழுதுக?
(ஆ)நீரிழிவு நோயாளிகளின் சிறுநீரில் குளுக்கோசு காணப்படுவதை அறிந்து கொள்வதற்கு பயன்படும் இரசாயனப்பொருளைப் பெயரிடுக?
(இ) நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவு ஒன்றையும் உண்ணக்கூடிய உணவு ஒன்றையும் குறிப்பிடுக?
(ஈ) குருதியில் குளுக்கோசு செறிவைக் கட்டுப்படுத்துவதில் பயன்படும் ஏதாவது இரு ஓமோன்களைப் பெயரிடுக. அவற்றின் சொற்பாட்டையும் விளக்குக?
vii) ஒருவரின் குருதியமுக்கம் 120/80mm என்பதன் கருத்தை விளக்குக?
viii) (அ) ஈமோகுளோபின் ஆக்கத்திற்கு தேவையானவற்றைப் பெயரிடுக?
(ஆ) ஈமோகுளோபின் மூலம் ஆற்றப்படும் செயல் யாது?
xi) ESR என்பதன் விளக்கப்பெயரை எழுதுக?
x) WBC கணிப்பின் போது நிணநீர்க் குழியங்களில் அதிகரிப்புக் காணப்படும் எனில் எந்த விடயத்தை வைத்தியர் அறிந்து கொள்வார்?

# இன்று ஒரு தகவல்

## கணித மேதை ஐன்ஸ்டீன்

ஒரு சின்னப் பையன், பார்க்கிறவர்கள் அவனைஒரு 'மண்டு' என்றுதான்சொல்லுவார்கள். அப்படித்தான் அவனும் இருந்தான். அதுமட்டுமில்லை. அவன் மிகவும்வெட்கப் படுவான். மற்றப் பையன்களோடு சேர்ந்து விளையாடுவதற்கே அவனுக்கு மிகவும் வெட்கம் அதனால் அவனின் வீட்டில்இருக்கிற கோழிக்குஞ்சுடன் தான் விளையாடிக் கொண்டிருப்பான், அவன்ஒரு நாள் ஒரு டிராம் வண்டியில் ஏறிப் போயிருக்கிறான் கொண்டக்டர் டிக்கட்டும்-மீதிப்பணமும்கொடுக்கிறார். வாங்கி எண்ணிப்பார்க்கிறான். பணம் குறைவது போல் அவனுக்குத் தெரிகிறது. உடனே கொண்டக்டரிடம் 'என்ன சார் பணம் குறைவாக இருக்கிறதே' என்கிறான்.

கொண்டக்டர் பணத்தை வாங்கி மறுபடியும் எண்ணிப் பார்க்கிறார். அதுசரியாகவே இருக்கிறது. கொண்டக்டருக்குச் சரியான எரிச்சல் என்னப்பா இது! சரியாகத்தானே இருக்கிறது. என்ன உனக்குக் கணக்குத் தெரியாதா? உன்னோடு பெரிய தொல்லையாய்ப் போயிற்றே' என்று அலுத்துக் கொண்டார். சில்லறைக் காசைச் சரியாகக் கூட்டிப் பார்க்கத் தெரியாத அந்தச் சின்னப் பையன் பெயர் தான் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

ஆமாம்அந்தப் பையன்தான் வளர்ந்து கணித மேதை ஆனான். பிற்காலத்தில்அவர் போட்ட கணக்கை உலகமே புரிந்து கொள்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீனும்ஒரு புதிர்! அவர் கண்டுபிடித்த 'ரிலேட்டிவிட்டி' தத்துவமும் புதிர். இப்படித்தான் எல்லோரும் சொல்லுவார்கள். மனிதஅறிவுக்கு இது வரைக்கும் எட்டாமலிருந்த ஒரு பெரியதத்துவம். அதை அவர் புரிந்து கொண்டார். அவர் புரிந்து கொண்ட அளவுக்கு மற்றவர்களையும் புரிய வைப்பதற்கு அவரால் முடியவில்லை. அதனாலேதான் இந்தத்தத்துவத்தைப் பற்றியே இதுவரை 900 புத்தகங்களுக்குமேல் வந்திருக்கின்றன.

எத்தனை புத்தகங்கள் வந்திருக்கின்றன என்பது புரிகிறதேதவிர அதிலேஉள்ளதைப் புரிந்துகொண்டவர்கள் எத்தனைபேர் என்பது இன்னமும் தெரியவில்லை! 'திடப்பொருள்களெல்லாம் அழிந்துவிடும். ஆனால் அதுமாதிரிக் காலமும் இடமும் அழியாது நிலைத்திருக்கும்'-இது முன்னர் இருந்தபெரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துச் சொன்னது. ஆனால் ஐன்ஸ்டீன் 'திடப்பொருள்கள் அழிந்துவிடும்என்றால் காலமும்-இடமும் அழிந்தே தீரவேண்டும்' என்றார். அதை நிருபித்தும் காட்டினார்.

ஐன்ஸ்டீன் ஒருமுறை ரயிலில போகிறபொழுது அவருக்குப்பசி! ஏதாவது சாப்பிடலாம்என்று தோன்றியது. அதனால் ரயில்வே சிற்றுண்டிக் கடைக்குப்போய் என்ன இருக்கிறது சாப்பிடுவதற்கு? என்று கேட்டிருக்கிறார். அங்கே வேலைசெய்து கொண்டிருந்த ஆள் எழுதியிருந்த பட்டியல்ஒன்றை எடுத்து இவரிடம் நீட்டியிருக்கிறார். அதைப்படித்துப் பார்க்கலாம் என்று நினைத்துச் சட்டைப் பையில் கண்ணாடியைத்தேடியிருக்கிறார் கிடைக்கவில்லை எங்கேயோ தவற விட்டுவிட்டார். பட்டியலை அந்த வேலையாளிடமே கொடுத்து இதை நீயே படித்துக்காட்டப்பா என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு அந்தஆள் 'நானும் உங்களைப்போலத்தான் சார்! படிக்கத்தெரியாது' என்று சொல்லியிருக்கிறான். அவருக்கு வந்தசிரிப்பில் பசிகூட மறந்துபோய் விட்டதாம் பொதுவாக ஒரேவிஷயத்தில் ஆழ்ந்த சிந்தனையுள்ளவர்கள் மற்றவிஷயத்தில் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை.

ஐன்ஸ்டீனைப்பற்றி இன்னொருகதையும் சொல்லுவார்கள் இப்போது, எல்லாரும் குளிப்பதற்கென்று ஒரு சோப் ஷேவிங்பண்ணுவதற்கு என்று ஒருசோப்... இப்படித்தானே வைத்திருப்பது வழக்கம். இரண்டும் வெவ்வேறு விதம்ஆனால் ஐன்ஸ்டீன் இப்படித் தனித்தனியாகஇரண்டு சோப்கள் வைத்திருக்கவில்லையாம். குளிக்கவும் சேவ் பண்ணவும் ஒரே சோப்பைத்தான் பயன்படுத்தினராம்.

அதைப்பார்த்துவிட்டு மற்றவர்கள் 'ஏன்இப்படி? தனித்தனியாக இரண்டுசோப்வைத்துக்கொண்டால் என்ன, என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குஅவர்'அப்படிவைத்துக்கொண்டால் அது என்னைக் குழப்பமடையச் செய்கிறது' என்றாராம். இவருடைய தத்துவம் உலகத்தையே குழம்பப்பண்ணியிருக்கிறது, ஆனால் இவர்எங்கே குழம்பிப்போயிருக்கிறார்பார்த்தீர்களா?

'இவ்வளவும் சொல்லிவிட்டு நான்கடைசியாகச் சொல்ல வருகிறவிஷயம் என்ன தெரியுமா?' பெரிய மேதைகள் எல்லாரும் ஞாபக மறதிக்காரர்களாக இருக்கலாம். ஆனால்... ஞாபகமறதி இருக்கிறவர்கள் எல்லாரும் மேதைகள் என்று நினைத்துவிடக்கூடாது. அப்படிப்பார்க்கப் போனால் என்னுடைய நண்பர்களில் பலர்மேதைகள். என்னுடைய நண்பர்ஒருவர் அவருக்கு மிகுந்தஞாபகமறதி இதற்காக ஒருடாக்டரிடம் போனார். 'டாக்டர்'எனக்கு எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளமுடியவில்லை. கொஞ்சநேரத்துக்குள் மறந்து போய்விடுகிறேன், நீங்கள் தான் ஏதாவது மருந்து கொடுத்து இதைச்சரிசெய்ய வேண்டும் என்றுசொல்லியிருக்கிறார்.

'சரி! உங்களுக்கு இது எத்தனை நாளாக இருக்கிறது?' என்று டாக்டர் கேட்டிருக்கிறார். உடனே இவர் 'எது' எத்தனைநாளாக இருக்கிறது என்று கேட்கிறீர்கள்?, என்று சொன்னார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## நிதிப் பற்றாக்குறையால் பணிகளில் தாமதம்

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகப் பணிகளை முன்னெடுப்பதற்கு நிதிப்பற்றாக்குறை பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

நிதிப்பற்றாக்குறை காரணமாக தமது பணிகளில் தாமதம் ஏற்படுவதாகவும், எனினும் இயன்ற அளவுக்குத் திருப்தி கரமாக தமது பணிகளைஆற்றி வருவதாகவும் யாழ். அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகர தெரிவித்தார்.

இதேவேளை, தமது பணிகளுக்கு வேண்டிய நிதி விரைவில் வந்து சேரும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (உ-16,6)

# நெடுந்தீவு நிலைவரம் குறித்து நோர்வேக்கு தெரிவிக்கப்படும்

## கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட அரசியல் கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, நெடுந்தீவில அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இடையூறு இருப்பதாக கூற முடியாது.இலங்கை கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் இவ்வாறு எம்.ரி.வீ. தொலைக்காட்சியின் குட் மோனிங் ஸ்ரீலங்காவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; நெடுந்தீவில் இருந்து வெளியேறிய ஈ.பி.டி. பியினர், மீண்டும் நெடுந்தீவுக்குச் சென்றதை எதிர்த்து அங்குள்ள மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

ஒஸ்லோவில் ஆரம்பமாகவுள்ள முதலாம், சுற்று, மூன்றாம் கட்டப் பேச்சு வார்த்தைகளின் போது இவ்விடயம் குறித்து கருத்து தெரிவிக்க முடியாது.

எவ்வாறாயினும், ஒஸ்லோவில் தற்போது தங்கி இருக்கும் யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவர் ரொன்பியூறு கொவ்டே இது தொடர்பாக நோர்வே பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது என்றும் கூறினார். (இ-8)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். அரிமாக் கழகம் நாளை சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு இலவச மருத்துவ சேவையைநடத்தவுள்ளது

யா- கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் இடம் பெறும் இவ் இலவச மருத்துவ சேவையில் பொதுமருத்துவம், கண்பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்கள் முதலியன இடம்பெறவுள்ளன (உ-9)

## லஞ்ச ஊழல் ஆ. குழு முன்னிலையில் ரத்வத்தை ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நேற்று முன்தினம் லஞ்சஊழல் ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜரானார்.

தனியார் வங்கிகளில் அவரது பாரியாரின்பேரில் வைப்பில் இடப்பட்ட பணம் தொடர்பாக வாக்குமூலத்தை பெற்றுக் கொள்வதற்கு லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் ஆஜராகு மாறுபணிக்கப்பட்டிருந்தது.

இதற்கமையவே இவர் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரானார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் ரத்வத்தைதம்பதிகளின் பேரில் சட்டத்திற்குப் புறம்பாக சுமார் 4 கோடி ரூபா வைப்பில் இடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டமை தெரிந்ததே. (உ-8)

## வாக்காளர் பட்டியலில் பெயர் பதியலாம்

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலில் தமது பெயரை பதிந்து கொள்ளாதவர்கள் அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை அந்தந்த உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிந்து கொள்ளலாம் என்று தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் அடுத்த வருடம்மே மாதம் வெளியிடப்படவுள்ளது. (உ-8)

## ஜே.வி.பிக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக கொழும்பு தெல்தெனிய நகரத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுமுன்தினம்நடைபெற்றது.

வரலாவிற்ற பிரதேசத் தலைவர் மற்றும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் ஆகியோரின் கொலைகளுக்கு மக்கள் விடுதலை முன்னணியினரே காரணம்எனக்குற்றம் சாட்டப்பட்டே இவ் ஆர்ப்பாட்டத்தை மக்கள்நடத்தியுள்ளனர்.

இதேவேளை இவ்இரு சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென மக்கள் விடுதலை முன்னணி ஏற்கனவே அறிக்கை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித்தொடரில், A. JEYARAJ இயக்கிய 'DESADANAM' எனும்மலையாளத் திரைப்படம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10-00 மணிக்குபுவியியற்றுறைமண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம்என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## பிரபாவின் உரையை, ஆவலோடு செவிமடுத்த ஸ்ரீலங்கா படைகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையைக் கேட்பதில் இராணுவத்தினர் மிகுந்த ஆவலாக இருந்தனர்.

காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தியில் கோண்டாவில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த மாவீரர் தின வளைவில் வைத்து ஒலி பரப்பான விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தினஉரையை தாவடி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்ததாக எமது நிருபர் தெரிவித்தார். (வ)

## நவரத்தினக் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சுமார் ஒன்றரை கிலோ எடையுள்ள 18 ரக நவரத்தினக்கற்களை பொலிஸ் போதைவஸ்து தடுப்பு பிரிவு கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்ட சமயமே பொலிஸ் போதைவஸ்து தடுப்பு பிரிவினர் இதனைக் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றினை கடத்த முற்பட்ட சந்தேகநபருக்கு 3இலட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும்

### மேல் மாகாண அபி. அமைச்சர்

ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் இவ்வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள வடகக்கு-கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களையும் பொலிஸ் நிலையங்களையும் அமைத்து வருவதுடன் வரிஅறவீடுகளை மேற்கொள்வது மக்கள் மத்தியில சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச். முகமட் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில் இவ்வாறான செயல்கள் எதிர் காலத்தில் ஏற்படாத வண்ணம் தடுப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சமாதானத்தின் மூலமாகவே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். சமாதான முயற்சிகளில் சிக்கல்கள் ஏற்பட்டாலும் சமாதானத்தை அடைவதே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும நிதி அமைச்சர் வி.ஜ.மு. லொக்குபண்டார தற்போதைய சமாதான முயற்சிகளுக்காகவே புலிகளின் செயற்பாடுகளான இவற்றினை பொறுத்துக் கொள்வதாகவும், முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம், புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகளினை தான் கண்டிப்பதாகவும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சர்வதேச சமூகத்தின் வீண் சந்தேகங்களுக்கு

# பிரபாவின் உரை விடை பகர்ந்துள்ளது

### அரசியல் விமர்சகர் சிவராம் பி. பி. சிக்கு பேட்டி

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்றுமுன்தினம் ஆற்றிய மாவீரர் தின உரை குறித்து அரசியல் விமர்சகரும் கொழும்புப் பத்திரிகையாளருமான டி. சிவராம் அவர்கள் பி. பி. சிக்கு அளித்த பேட்டி வருமாறு.**

**கேள்வி**

புலிகளின் தலைவர் பிரபாவின் மாவீரர் தின நிகழ்வு உரையின் முக்கிய அம்சம் என்ன?

**பதில்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் தம் மக்களுக்கொருமாநில சுயாட்சிஅமைய வேண்டும் என்றும் அந்த சுயாட்சி சுயநிர்ணய அடிப்படையில் அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகத்துக்கும், இங்குள்ள சிங்களவர்களுக்கும் இடையில் காணப்பட்ட பல்வேறு சந்தேகங்கள் தெளிவாகின்றவகையில் இவருடைய பேச்சு அமைந்துள்ளது.

**கேள்வி**

இந்த மாநில சுயாட்சி என்கின்ற கோரிக்கையின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு தனி ஈழம் என்ற கோரிக்கையை கைவிட்டு விட்டதாக மேற்கத்தைய ஊடகங்கள் தகவல் வெளியிடுகின்றன. இது பற்றிய உங்கள்கருத்துஎன்ன?

**பதில்**

பொதுவாக நாங்கள் கவனிக்கவேண்டியவிடயம்என்னவென்றால், விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழ் மக்கள் என்றுமில்லாத அளவிற்கு இன்று பேரம் பேசுகின்ற பலத்தோடு இருக்கின்ற நிலையில் இக் கூற்றை வெளிப்படுத்துகின்றார்.

அதாவது விடுதலைப்புலிகள் கடற்படை, தரைப்படை என்பவற்றோடு மிக மிகப் பலம் பொருந்திய ஒரு நிலையில் இருக்கின்ற வேளையில், அந்தப் பலத்தின் அடிப்படையில் இலங்கை அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் நின்றுகொண்டு, தனி நாடு என்கின்ற நிலையில் இருந்துசற்று இறங்கி வந்து, விடுதலைப் போராட்டம் வெறும் ஆயுதத்தை அடிப்படையாகக் கொண்டது மட்டுமல்ல அரசியல் ரீதியான விட்டுக்கொடுப்புகளுடன் அரசியல் ரீதியாகப் பெற்றுக் கொள்ளக் கூடியவற்றை அல்லது அரசியல் ரீதியாகச்சாதிக்கக் கூடியவற்றை எவ்வாறு சாதிக்கலாம் என்பதை ஆராய்வதற்கும் புலிகள் தகுதியுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதைப் புலப்படுத்துவதாக இவரின் பேச்சு அமைந்திருக்கின்றது.

> விடுதலைப் போராட்டம் வெறும் ஆயுதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. அரசியல் ரீதியான விட்டுக் கொடுப்புகளுடன் அரசியல் ரீதியாகப் பெற்றுக்கொள்ளக்கூடியவற்றை அல்லது அரசியல் ரீதியாகச் சாதிக்கக் கூடியவற்றை எவ்வாறு சாதிக்கலாம் என்பதை ஆராய்வதற்கும் புலிகள் தகுதியுள்ளவர்கள்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், மிகப்பலம் பொருந்திய நிலையில் புலிகள் இருக்கின்ற இந்த வேளையில் மிகவும் இறங்கிவந்து அரசியல் ரீதியானதொரு பாதையைத் தான் ஆராய இருக்கின்ற தன்மையை அவர் காட்டியுள்ளார்.

**கேள்வி**

அவருடைய பேச்சில், நடைபெறுகின்றசமாதானப் பேச்சுவார்த்தைகள் எந்த வொரு காலக் கெடுவிற்குள்ளும், எந்த விதமான நிபந்தனைகளுக்குள்ளும் இல்லாமல் நடைபெற வேண்டும் என்றுகூறியுள்ளார் இது எதனைக் குறிக்கின்றது?

பதில்: -

இது இந்தப் பிரச்சினை பற்றி பிருக்கின்ற சிக்கலைத்தான் குறிக்கின்றது. மிகத்தெளிவாக நாங்கள் காணக் கூடிய விடயம் என்னவென்றால், இலங்கையில் தமிழ் மக்களுக்குச் சரியானதொரு தீர்வு கிட்டவேண்டுமென்றால்இலங்கையினுடைய அரசியல்யாப்பு அடிப்படையில் மாற்றம் ஏற்படுத்தப் படவேண்டும். இது மாற்றப்படுவதானால் பாராளுமன்றத்தில் இதை பற்றி எதிரும் புதிருமாகத் தொடர்ந்து சண்டைபோட்டு வருகின்ற ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இன்றுமூன்றாவதுஅணியாகத் தோன்றியுள்ள விஜே..பியினரும், மற்றும் முஸ்லிம் கட்சிகளும் ஒன்றுபட்டு பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டுபெரும்பான்மையைக் கொண்டு வரவேண்டும்.

அது மட்டுமல்லாமல் சிங்கள சமூகத்திடம் சர்வசன வாக்கெடுப்பு மூலம் தமிழ்மக்களிடம் கொடுக்க வேண்டிய தீர்விற்கான அங்கீகாரத்தையும் பெற வேண்டும்.

இந்த நிலையில் இப்பிரச்சினையை அடுத்தவருடத்திற்குள் முடிக்கலாம் என்று பிரதமர்ரணில்விக்கிரமசிங்க அவர்கள் தெரிவித்துள்ள கருத்து எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமாகும் என்று தெரியவில்லை.

இந்தப் பின்னணியில் தான் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டிய பிரச்சினையில் அரசியல்சிக்கல்கள்உள்ள நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் இதை உடனடியாக ஒருகால எல்லையைக் குறிப்பிட்டுத் தீர்க்க முடியாது என்று கூறியிருக்கின்றார்என்பது தெரிகின்றது. (உ-4)

---

## இறுதி அரசியல் தீர்வுக்கு அவசியமான

# தேசிய கருத்தொற்றுமைப்பாட்டிற்கு ஆதரவு

# வழங்குவது அரசியல் தலைவர்களது கடமை

### ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் கூட்டறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் சகல அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் நாட்டில் நிரந்தர தீர்வொன்றைக் காண்பதற்கான பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு முன்வர வேண்டும்.

ஒஸ்லோ மாநாட்டில்கலந்து கொண்ட 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான தனது ஆதரவையும் உடனடி நிதியுதவியையும் வழங்கியுள்ள சர்வதேச நாடுகள், ஜப்பானில் அடுத்து நடைபெற விருக்கும் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாட்டில் நீண்டகால அடிப்படையிலான நிதியுதவிகள் வழங்குவது குறித்து ஆராயவுள்ளன.

ஆசிய-பசுபிக் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளாகிய நாங்கள் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாதான முயற்சிகளுக்கு எங்களது பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

சமாதான முயற்சியின் மிக முக்கியமான தருணத்தில்நாங்கள் உடனடி நிதியுதவிகளை வழங்குவதற்கு இணக்கம்கண்டுள்ள போதிலும் ரோக்கியோவில் அடுத்த ஆண்டுநடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற மாநாட்டில் இலங்கைக்கு நீண்டகால அடிப்படையில் நிதியுதவி வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

இலங்கை அரசாங்கமும்புலிகளும் ஏற்கனவே குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கண்டுள்ளனர்.

இந்த முடிவுகளை எட்டுவதற்குப் பாரிய துணிச்சல்அவசியம்.

இதேவேளை, இருதரப்பையும் மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் வன்முறைகளுக்கு மீண்டும் திரும்பாத வகையில் இதனைமேற்கொள்ளுமாறும்நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதி அரசியல் தீர்விற்கு அவசியமான தேசிய கருத்தொருமைப் பாட்டிற்கு ஆதரவு வழங்குமாறுஇலங்கையின் சகல அரசியல் தலைவர்களையும் அமைப்புக்களையும்கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## உள்ளூராட்சி மன்றங்களின் அடுத்த ஆண்டுத்திட்ட விபரங்கள் சேகரிப்பு

(சுதுமலை)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குஉட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களால் அடுத்த ஆண்டு செயற்படுத்தப்படவுள்ள குடியமர்வு, புனரமைப்பு, அபிவிருத்திதொடர்பான விபரங்களை உள்ளூராட்சி உதவிஆணையாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு சகல உள்ளூராட்சி மன்றங்களையும் தனித்தனியே கடிதமூலம் கேட்கப்பட்டுள்ளது.

குறுகிய காலத்திட்டம்நடுத்தர காலத்திட்டம் என்ற வகைப்படுத்தலில் மீளக்குடியமர்வு புனரமைப்பு புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்பவற்றை பட்டியலிடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-252)

## படையினரால் கைதானோர் பாதுகாவலர் சங்கத்தின் அங்கத்தவர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ். வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில், படையினரால் கைதானோர் பாதுகாவலர் சங்க அங்கத்தவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை, படையினரால் கைதானோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் ப. செல்வராசா, பொருளாளர் வே. கௌரி மற்றும் அன்னையர் முன்னணித் தலைவி, செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்களை அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு தன்னைச் சந்திக்குமாறு படையினரால் கைதானோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (உ)

## மனித உரிமை ஆ.கு.தலைவர் கொப்ட்றி குணதிலக நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின்பிரதிநிதிகள் சிலர் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கொப்ட்றி குணதிலக, ஆணையாளர்களான என் செல்வகுமரன், சரத்குரே, மனோகரி முத்தியெட்டுவேகெம ஆகியோரே வருகைதரவுள்ளனர்.

குடாநாட்டில்மனிதஉரிமைகள் சார்ந்த நடவடிக்கைகளை அவதானித்து அறியும் நோக்கில் இவர்கள் பயணம் அமைவது குப்பிடத்தக்கது. (உ-16-6)

## பரிசளிப்பு விழா

(துன்னாலை)

கரவெட்டி மெ. மி. த. க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு பாடசாலை அதிபர் வ. கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-41)

★ ★ ★

(துன்னாலை)

கரணவாய் பென்னம்பல வித்தியாலய பரிசளிப்புவிழாவும் ஸ்தாபகர் நினைவுதினமும் நாளை சனிக்கிழமை பி. ப. 1.30 மணிக்கு அதிபர் க. பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. தியாகராசா கலந்துகொள்ளவுள்ளார். (உ-41)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

மல்லாகம விசாலாட்சி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மேலைத்தேயவாத்திய அரங்கேற்ற விழாவும்இன்றுகாலை 9. 30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் கா. சந்திரபாலனும் சிறப்பு விருந்தினர்களாக வலி வடக்குபிரதேச சபைத் தலைவர் திருமதி பா ஸ்ரீபாஸ்கரன் முதன்மை ஆசிரியர் திருமதி இ. இராமலிங்கம், மல்லாகம கிராம உத்தியோகத்தர் சு.பூபாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2002

விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் பகுதி-I
விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் பகுதி-II

ஆக்கம்:
இரா.செல்வவடிவேல்

### பகுதி - I

01. வேலை செய்யும் வீதம் எங்ஙனம் அழைக்கப்படுகிறது?
i) சக்தி ii) வலு iii) ஆர்முடுகல் iv) கதி

02. வேகம் என்பது?
i) ஓரலகு நேரத்தில் பயணம் செய்த தூரமாகும்
ii) ஒரு செக்கனில் சென்ற தூரமாகும்
iii) ஒரு மணித்தியாலத்தில் சென்ற தூரமாகும்
iv) குறித்த திசையில் வழியே உள்ள கதியாம்

03. தூய பதார்த்தமொன்றின் இயல்பாக அமையாதது?
i) ஏக வினமானது ii) பல்லினமானது
iii) குறித்த உருகு நிலை உடையது iv) குறித்த கொதி நிலை உடையது

04. பயிர்ச் செய்கையின் போது ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்தும் சந்தர்ப்பங்கள்?
A. வாழை நடும் போது இலைகளை வெட்டிய பின் நடுதல்
B. நாற்றுக்களை பெரிய தாவரங்களின் நிழலில் நாட்டுதல்
C. நாற்று மேடைகளை பொலீத்தீன் தாளால் மூடிவைத்தல்
i) A மட்டும் ii) B யும் C யும் iii) A யும் B யும் iv) A யும் C யும்

05. தரப்பட்டுள்ள தொழிற்பாடுகளுக்கு அமைய குறிப்பிடப்படும் அலகுகளின் சரியான ஒழுங்கு?
* ஒரு செக்கனில் வெளிவிடப்பட்டசக்தி
* வேலை செய்யும் வீதம்
* ஓய்வில் இருக்கும் பொருள் ஒன்றின் ஓய்வை மாற்றும் புற வேளை
i) NJW ii) WJN iii) JWN iv) JNW

06. தாவரங்களின் ஒளித் தொகுப்பின் போது பயன்படும் அகக்காரணி?
i) சூரியஒளி ii) பச்சையம்
iii) காபனீரொட்சைட் iv) நீர்

| உருகு நிலை $C^0$ | அடர்த்தி $Kg\ m^{-3}$ | வெப்பக் கடத்தாறு |
|---|---|---|
| a - 2700 | d - 3200 | g - சிறந்தது |
| b - 1083 | e - 8920 | h - மகச்சிறந்தது |
| c - 660 | f - 2710 | i - சிறந்தது |


7ஆம் 8ஆம் வினாக்களிற்குரிய அட்டவணை தரப்பட்டுள்ளது.

07. உலோகங்களின் சிறப்பியல்புகள் சில தரப்பட்டுள்ளன. இவற்றில் விமான செய்யப்பயன்படுத்தச் சிறந்த உலோகம் கொண்டிருக்கக்கூடிய இயல்புகள்.
i) b,e,h ii) c,d,i iii) a,f,g iv) a,e,i

08. சமையற் பாத்திரம் செய்வதற்குப் பயன்படக்கூடிய உலோகம் கொண்டிருக்க கூடி சிறந்த இயல்புகள்?
i) b,e,i ii) b,f,h iii) a,t,h iv) c,d,g

09. கூற்று :ஸ்டைரீன் எனும் பதார்த்தத்தின் பல் பகுதியமே ரெஜிபோம் ஆகும்.
காரணம்: ரெஜிபோம் மண்ணில் சேரும் போது மண்ணின் நீர் வழிநதோடும் இயல்பு குறைகிறது.
i) கூற்றும் கர்ரணமும் உண்மை. காரணத்தால் கூற்று நன்கு விளக்கப்படுகிறது
ii) கூற்றும் காரணமும் உண்மை காரணத்தால் கூற்றுவிளக்கப்படவில்லை.
iii) கூற்றும் காரணமும் உண்மையானவை. கூற்றுக்கும் காரணத்திற்கும் தொடர்பில்லை.
iv) கூற்றும் காரணமும் பொய்யானவை காரணம் கூற்றுடன் பொருந்துகிறது.

10. ஆர்முடுகலுடன் இயங்கும் வாகனமொன்றின் இடப் பெயர்ச்சி நேர வரைபு பின்வரு எவ்வகையில் அமையும்?





* பகுதி I இல் காணப்படும் 40வினாக்களும் ஏறத்தாள 10வடிவங்களில் அமைக்கப்படுகிறது. அவ்வடிவங்கள் 10வினாக்களில் காட்டப்பட்டுள்ளது

### பகுதி II

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் விரும்பிய ஏழு வினாவிற்கும் விடை தருக.**


01. வளிமண்டலத்தில் காணப்படும் தூசு துணிக்கைகள் பல விளைவுகளுக்கு காரணமா அமைகின்றது. மனிதனின் செயற்பாடும் இயற்கை நிகழ்வுகள் சிலவும் தூசு துணிக்கை உருவாக்குகின்றன. சூரிய உதயம் மறைவு வாணம் நீல நிறமாக காணப்படல் மழை பெய்தல் போன்ற பல நிகழ்வுகளுக்கு இவை காரணமாக அமைகின்றன. ஒரு காலத்தி வளி மண்டலத்தில் தோன்றிய தூசு காரணமாக தாவரச் செயற்பாடுகள் தடைப்பட்( டைனோசர் போன்ற விலங்குகள் அழிந்தன. சில முலையூட்டி வகை மட்டும் தப்பியது வளிமண்டலத்தில் அதிகளவில் தூசுகள்காணப்படுவதனால் சுவாசப்பிரச்சினைகள் கண்நோய் சரும நோய் போன்றவை தோன்றுகின்றது.
i) வளிமண்டலத்தில் காணப்படும் தூசு காரணமாக நிகழ்வதாக கூறப்படும் இயற்கை நிகழ்வுகளைத் தருக
ii) வளிமண்டலத்தில் தூசுகள் இருப்பதை எவ்வாறு நிரூபிக்கமுடியும்
iii) வானம் நீல நிறமாகத் தோன்றுவதில் தூசுகளின் பங்களிப்பை விளக்குக.
iv) தூசுகள் தோன்றுவதில் பங்கேற்கும் மனிதச் செயற்பாடுகள் மூன்றினை விளக்குக
v) மழை பெய்வதில் தூசுகளின் பங்களிப்பை விளக்குக.
vi) டைனோசர் போன்றவற்றின் அழிவுக்கு காரணமாக கருதப்படும் தூசுகள் எவ்வாறு தோன்றின.
vii) தூசுகள் காரணமாக ஏற்படும் அசாதாரண நிலைமைகள் எனக் கூறப்பட்டுள்ளவை எவை?
viii) வளிமண்டலத்தின் மாசு படலுக்கு காரணமாக அமையும் திண்ம, வாயு பொருட்கள் வகைக்கு மூன்று தருக.
xi) வளிமண்டலத்தில் காணப்படும் நுண்ணுயிர்கள் மூலம் மனிதன் அடையு நன்மைகள் மூன்று தருக?
x) இலங்கையில் காணப்படும் இலங்கைக்கு உரித்தான முலையூட்டிகள் இரண் தருக?

02. A,B என்ற விளையாட்டுக் கார்கள், ஒரு குறித்த திசையில் பயணம் செய்த போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வரையப்பட்ட வேக நேர வரைபுகள் தரப்பட்டுள்ளன




i) முதலாவது வாகனம் புறப்பட்டு எத்தனை செக்கன்களின் பின்னே இரண்டாவது வாகனம் புறப்பட்டது?
ii) இரண்டாவது வாகனம் எத்தனை செக்கனுக்கு ஆர்முடுகலுடன் சென்றது?
iii) இரு வாகனங்களினதும் ஆர் முடுகல்களைக் காண்க?
iv) Aஎனும் கார் எந்நேர இடைவெளியில் சீரான வேகத்துடன் சென்றது?
v) இயக்கத்தில் கூடிய தூரம் பயணம் செய்த வாகனம் எது?
vi) கார் B யின் திணிவு 0.5kg எனின், B ஆர் முடுகலுடன் இயங்கிய வேளையி காரின் மீது தொழிற்பட்ட விசை யாது?
vii) கார் A சீரான வேகத்துடன் இயங்கும் போது அதன் மீது தொழிற்படும் பு விசையின் பருமன் யாது?
viii) வாகனம் Aயின் முதல் 15செக்கன் இயக்கத்திற்கான இடப் பெயர்ச்சி நே வரைபை பருமட்டாக வரைக?

03. பூ வொன்றின் நெடுக்குவெட்டு முகம் தரப்பட்டுள்ளது



i) இப் பூவைப்பற்றிக் கூறக் கூடிய ஏதாவது மூன்று விடயங்களைத் தருக?
ii) பூ, அரும்பாக இருக்கும் போது பூவைப் பாதுகாக்கும் பகுதியைப் பெயரிடுக?
iii) இப்பூவில் காணப்படும் பூச்சியைக் கவரக் கூடிய மூன்று விடயங்கள் தருக.
iv) பகுதிகள் C, D யில் ஏற்படும் மாற்றத்தை தருக?
v) மரங்களில் பூக்கும் எல்லாப்பூக்களும் காயாவதில்லை. இதற்கான இரு காரணங்கள் தருக?
vi) வித்துக்கள் அற்ற பழங்களை அன்னாசி, வாழைப்பழம் ஆகியவற்றில் காணலாம. இதற்கான காரணத்தை விளக்குக?
vii) இனிப்புச் சுவையான பழங்களைத் தரும் தாவரம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட வித்துக்களை முளைக்க வைத்த போது சில விதைகள் முளைத்து புளிப்புச் சுவையான பழங்களைத்தரும் தாவரங்களைத் தந்தன. இதனை எவ்வாறு விளக்குவீர்?

04.





i) A,B எனும் குறைபாடுடைய இரு கண்களைப்படம் காட்டுகிறது? ஒவ்வொருவரிடமும் உள்ள பார்வைக் குறைபாடுகளைக் குறிப்பிடுக.
ii) A, B எனும் பார்வைக் குறைபாடுள்ளவர்கள் எத்தகைய பொருட்களைப் பார்க்க முடியும்
iii) A,B எனும் குறைபாடுள்ளவர்கள் பயன்படுத்த வேண்டிய வில்லைகளின் வகையைக் குறிப்பிடுக?
iv) கண்வைத்திய நிபுணர் ஒருவர் கண் குறைபாடுள்ள இருவருக்கு வழங்கப்பட்ட மருத்துவச்சிட்டை பின்வருமாறு.

| C | R | L |
|---|---|---|
| | +2.5 | +2.5 |

| D | R | L |
|---|---|---|
| | -0.5 | -0.5 |


(அ) இம்மருந்துச் சிட்டைகளில் Aக்கும் B க்கும் பொருத்தமானதை இனங்காண்க?
(ஆ) இவர் பயன்படுத்தும் வில்லைகளின் குவியத்தூரம் யாது?
v) அன்றாட வாழ்க்கையில் ஒளிக்கதிர்கள் பல்வேறு தேவைகளுககாக பயன்படுத்தப்படுகின்றன.
(அ) (a) ஒளியியல் நார்கள் (b) லேசர் கதிர்
(c) செய்கீழ் கதிர் (d) கழிஊதாக் கதிா
என்பன பயன்படும்ஒவ்வொரு சந்தர்ப்பம்தருக?
(ஆ) செங்கீழ் கதிர்கள், கழியூதாக்கதிர்கள் என்பவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் ஒவ்வொன்று தருக?
vi) கண்வில்லை ஒன்றின் மூலம் பொருள் ஒன்றுக்கு விம்பம் உருவாக்கப் படுவதைக் காட்டுவதற்கு கதிர் வரிப்படம் வரைக?

05. துவிச்சக்கர வண்டியொன்றின் பகுதிகளைப் படம் காட்டுகிறது.



i) துவிச்சக்கர வண்டியினை உதாரணமாகக் கொண்டு இதில் உள்ள எளிய பொறிகளைக் குறிப்பிடுக?
ii) இங்கு சக்தி ஊடுகடத்தலுக்குப் பயன்படும் பகுதியைப் பெயரிடுக.
iii) துவிச்சக்கர வண்டியின் உடல்(Body) ஆக்கப்பட்ட பதார்த்தத்தைப் பெயரிடுக?
iv) இதில் உராய்வு விசையை (அ) கூட்டுவதற்கும் (ஆ) குறைப்பதற்கும் காணப்படும் பகுதிகளைத் தருக?
v) மோட்டார் வாகனங்களில் பின்வரும் பகுதிகள் ஆக்கப்பட்டுள்ள பதார்த்தங்களைப் பெயரிடுக?
(அ) அசையும் பாகங்கள் (ஆ) போதிகைகள்(Bearings)
(இ) கதிர்வீசி (ஈ) தீப்பொறிச் செருகி (Sport Pluq)
vi) தரப்பட்ட துவிச்சக்கர வண்டியில் பெரிய பற்சில்லில் 48பற்களும் சிறிய பற்சில்லில் 24 பற்களும் உண்டு. சில்லின் விட்டம் 28cm ஆகும். துடுப்புயரம் ஒரு நிமிடத்தில் 5சுழற்சிக்கு உட்படும். துடுப்புயரத்தின் நீளம் 7cm ஆகும்.
(அ) ஒரு நிமிடத்தில் சில்லு எத்தனை தடவைகள் சுழலும்?
(ஆ) துவிச்சக்கர வண்டியின் கதியை $ms^{-1}$ எனும் அலகில் காண்க?
vii) துவிச்சக்கர வண்டியில் பெற்றோலியப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்களையும் பயன்பட்டுள்ள பொருட்களையும் பெயரிடுக?

6.




புவியின் ஒட்சைட்டிலுள்ள மூலகங்களின் தொடர்பு நிறையை திணிவின் சதவீதத்தில் படங்கள் காட்டுகின்றன.
i) புவியின் ஓட்டில் இரும்பின் திணிவினது சதவீதம் யாது?
ii) பின்வரும் உலோகங்கள் இயற்கையில் காணப்படும் வடிவத்தை பெயரிட்டு, அதன் இரசாயனக் குறியீட்டையும் தருக?
(அ) பொற்றாசியம் (ஆ) கல்சியம் (இ) இரும்பு (ஈ) அலுமினியம்
iii) (அ) புவியோட்டில் அதிக திணிவு காணப்படும் மூலகத்தைப் பெயரிடுக?
(ஆ) இதன் இலத்திரன் நிலையமைப்பை வரைக?
(இ) இம்மூலகம் ஆவர்த்தனப் பாகுபாட்டில் உள்ள நிலையைத் தருக?
iv) படத்தில் தரப்பட்ட உலோகங்களை அவற்றின் தாக்குதிறன் அடிப்படையில் இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக?
v) படத்தில் தரப்பட்ட மூலகங்களிலிருந்து பின்வருவனவற்றைத் தெரிக.
(அ) P-வகை குறை கடத்தியை ஆக்குவதற்கு பயன்படுபவை
(ஆ) சிறந்த மின்கடத்தியாக உள்ள அல்லுலோகம்
(இ) விமானத்தயாரிப்புக்கு பயன்படுவது
(ஈ) மிகச்சிறந்த நேர் அயனைத் தருவது எது?
(உ) சீனச்சட்டி தயாரிப்பதற்கு பயன்படுபவை
vi) (அ) ஆய்வுகூடத்தில் ஒட்சிசன் வாயுவைத் தயாரித்து சேமிப்பதற்கான உபகரணத்தை படம் வரைந்து பகுதிகளைப் பெயரிடுக?
(ஆ) இவ்வாயு தயாரிப்பில் இடம் பெறும் தாக்கத்திற்கான இரசாயனச் சமன்பாட்டைத் தருக?
vii) இறப்பர் வல்கனைசுப்படுத்தலுக்கு பயன்படும் மூலகம் எது?

07. பின்வருவனவற்றில் ஏதாவது ஐந்தினை விஞ்ஞான பூர்வமாக விளக்குக?
i) சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப காடுகளின் விஸ்தீரணம் குறைவடைகிற
ii) கர்ப்பவதிகளான பெண்களை மின்கதிர் பரிசோதனைகளுக்கு உட்படுத்துவ விரும்பத்தக்கதல்ல.
iii) இறப்பர் பாலுடன் போமல்புகைட்டு சேர்க்கப்படுகிறது.
iv) ரொக்கெட் செலுத்துகையில் வாயுக்களின் தகனம் முக்கிய பங்கு வகிக்கிற
v) அப்பளம் பொரிப்பதற்கு நீரைப்பயன் படுத்தாமல் தேங்காய் எண்ணெய் பய படுத்தப்படுகிறது.
vi) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தாவரங்களில் கற்றாளை முக் மானதாக மாறிவருகிறது.

08. தாவரங்களுக்கு சாதகமான, பாதகமான செயற்பாடாக ஆவியுயிர்ப்புச் செயற்பா அமைந்துள்ளது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.
(அ) தாவரங்களில் நீகழும் ஆவியுயிர்ப்பு என்பதனை விளக்குக?
(ஆ) ஆவியுயிர்ப்புப் பற்றிய மேற்குறிப்பிட்ட கருத்திற்கான காரணத்தை விளக்குக?
(இ) சதுரக்கள்ளி,சதைகரைச்சரன், பூசணித்தாவரங்கள் ஆவியுயிர்ப்பைக் கட்டுப் படுத்தக் கொண்டுள்ள சிறப்புக்களை தனித்தனியாகக் கூறுக?
(ஈ) i) ஆவியுயிர்ப்பு வேகத்தை அளவிடப்பயன்படும் உபகரணம் எப்பெயரால அழைக்கப்படுகிறது?
ii) இத்தகைய உபகரணம் ஒன்றை அமைக்கும் போது தாவரத்தை எவ்வாறுபயன்படுத்துவீர் என விளக்குக?
iii) இத்தகைய பரிசோதனையில் எடுகோளாகக் கொள்ளப்படும் இரு விடயங்களைத் தருக?

(04ஆம் பக்கம் பார்க்க

# புலிகள் ஆயுதங்களை கையளிப்பது சமாதான முயற்சியின் ஓர் அங்கம்

## ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

**கடந்த ஒரு ஆண்டு காலமாகசண்டையெதுவும் நடைபெறாததுடன், போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையும் சுமார் 11 மாதங்களாக நீடிக்கும் நிலையில் ஆயுதங்களைப் புலிகள் கையளிக்கும் விடயம் சமாதான முயற்சிகளில் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறுகின்றோம்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களிடமுள்ள கனரக ஆயுதங்களை இனி கையளிக்கத் தொடங்கலாம் என ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர் பி.பி.சி. தமிழ்ச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும்,

ஆயுதங்களைக் கையளிக்கும் விவகாரம் சமாதான முயற்சிகளில்சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய காலம் வந்துள்ளது என நாம் கருதுகிறோம்.

இந்த விடயம் ஒஸ்லோ மாநாட்டில் அனைத்துலக சமுதாயத்தினாலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இது விடயத்தில் புலிகளிடம் இருந்து வந்த பதில் அவ்வளவு திருப்திகரமானதாகஅமையவில்லை.

ஆயுதங்களைக் கையளிப்பதுபற்றி தற்போது நினைத்துப்பார்க்கக்கூட முடியாது என புலிகள் கூறுகின்றனர்.

அவர்களின் இந்த இறுக்கமான நிலைப்பாட்டிற்குப் பதிலாகத்தான் தாக்குதல்களிற்கு முதலில் பயனப்படுத்தப்படும் கனரக ஆயுதங்களைக் கையளிப்பது பற்றி புலிகள் சிந்திக்க வேண்டும் எனநாங்கள் கூறுகின்றோம்

ஆயுதங்களைப் புலிகள் கையளிப்பது சமாதான நடவடிக்கைகளில் ஓர் முக்கிய அம்சம் ஓர் இறையாண்மையுள்ள நாட்டில் இருஇராணுவங்கள் இரு கடற்படைகள இருக்கமுடியாதுஎன்று குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்; முக்கியமான மையவிவகாரங்கள் என நாங்கள்கூறும் விடயங்கள்குறித்தும் இந்தப் போருக்கான அடிப்படை அரசியல் காரணங்கள் குறித்தும் பேச்சுவார்த்தைகள் நகரவேண்டும்.

மையவிடயங்கள் பேசப்படாமையால் ஆயுதங்கள் கையளிக்கப்படுவதுகுறித்து பேசுவதற்கான சந்தர்ப்பம இப்போது இல்லையென்பதை நாங்கள் உணர்கின்றோம்.

இதனால் ஆட்சிநிர்வாக செயற்பாடுகளில் தாமதம் ஏற்படவே செய்யும்

ஆயுதங்கள் கையளிப்பது பற்றி எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படாத நிலையில் புலிகள் ஆட்சி நிர்வாகத்தில் ஏதாவதொரு வகையில் வெவ்வேறு மட்டத்தில் பங்கு கொள்வது குறித்து ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்று.

கடந்த சில மாதங்களாக ஜனாதிபதி கூறி வந்த வற்றையே, அதாவது ஆயுதங்கள் கையளிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். ஜனநாயக மரபுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் இறைமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என அவர் கூறி வந்த வற்றையே ஒஸ்லோ மாநாட்டில் நிதி வழங்கும் நாடுகளும், அமெரிக்காவின் உதவிச் செயலாளரும் கூறியுள்ளனர்

இதையே மநாட்டு அறிக்கையும் வலியுறுத்துகிறது என்று கூறினார். (உ-4)

## ஒஸ்லோ மாநாடு குறித்து அறிக்கை விட வேண்டும் பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஒஸ்லோ அரசியல் ஒத்துழைப்பு மாநாடு சம்பந்தமான அறிக்கையொன்றை விடுக்க வேண்டும் என்று பொதுஜனஐக்கிய முன்னணி, ஜே.வி.பி என்பன பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவைக் கோரியுள்ளன.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து ஒஸ்லோ மாநாடு தொடர்பாக பாராளுமன்ற விவாதத்திற்குத் தாம் கோரிக்கை விடுக்கவிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதே வேளை, நேற்று பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட வேளையில் ஒஸ்லோ மாநாடு பற்றியவிவாதத்திற்கு 3 மணித்தியாலங்கள் ஒதுக்குவதற்கு ஆளும் கட்சியினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பாராளு மன்ற உறுப்பினர் திமின பண்டார தென்னக்கோன் இந்த விவாதத்திற்கான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

ஆக்கபூர்வமான விவாதத்தினை நடத்தும் நோக்கத்துடன்பிரதமர்ரணில்விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றினை விடுப்பது பெரிதும் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரர் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளார். (உ-4)

## இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிக்கு சீனா உதவி

(கொழும்பு)

இலங்கையின் தொழில் முறைசார் தொழில்நுட்பக் கல்லூரிக்கு உதவிசெய்யசீனா தீர்மானித்துள்ளது.

இதுபற்றி ஆராய்வதற்காக சீனாவின் தூதுக்குழுவொன்று தற்போது இலங்கை வந்துள்ளது.

இந்தக்குழுவைச் சேர்ந்தவர்கள்மூன்றாம்நிலைக் கல்வியமைச்சர் ஹபீர்காசிம் நேற்று முன்தினம் சந்தித்து தனியார் துறையின் ஒத்துழைப்போடு தொழில்முறைசார் தொழில்நுட்பப்பயிற்சிமுறைகளை ஆரம்பிக்கப்போவதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இந்நிலையில் முதலாவதாக இலத்திரனியல் துறையை சார்ந்தவர்களுக்கும். கட்டட நிர்மாணத்துறையைச் சார்ந்தோருக்கும் பயிற்சியளிக்கப் படவுள்ளது.

பயிற்சி நெறிகளைவெற்றிகரமாககற்று முடிப்போருக்கு சர்வதேச தரத்திலானசான்றுகள் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (உ-4)

## கலாமன்ற ஏற்பாட்டில் இன்று சமாதான மாநாடு

வடக்குத் தெற்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கமிக்கும் சமாதானத்திற்கான மாநாடு இன்று காலை 9 மணிக்கு யாழ்.பஸ் நிலைய கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில், இடம்பெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும். இச் சமாதான மாநாட்டில் பங்கேற்பதற்கென தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் 29 எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் நேற்று முன்தினமே யாழ். வந்துள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் யாழ்.குடாநாட்டின்பல்வேறு இடங்களுக்கும் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் மாணவர்கள் மற்றும் மீனவர்களை அணுகி அவர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை இன்றைய மாநாட்டில் குடாநாட்டில் உள்ள சுமார் 50 வரையான எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தேசிய பாடசாலைகளில் மனித உரிமை நிலையம் டிச. 10 இல் அமுல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளில் மனித உரிமை நிலையங்கள் அமைக்கும் திட்டம் டிசம்பர் 10 ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்படவுள்ளது.

25 தேசிய பாடசாலைகளில் இவ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு நிலையத்திற்கும் சட்டத்தரணி ஒருவர் இணைப்பாளராக நியமிக்கப் படவுள்ளார். (உ-3)

## சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் எழுதுவினைஞர்கள் நேற்றுத் தொடக்கம சட்டப்படி பணிபுரியும்போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

சுகாதார சேவைகள், எழுதுவினைஞர் கூட்டு முன்னணி உட்படபல அமைப்புக்கள் இந்தப்போராட்டத்தில் கலந்துகொள்கின்றன.

எதிர்வரும் 5 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

முக்கியமான 7 கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்தப்போராட்டத்தை நடத்துவது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## க. பொ. த. (சா/த) பரீட்சை வினாத்தாள்கள் யாழ். எடுத்து வரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

2002 டிசெம்பர் 2ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. (ச/த) பரீட்சைக்கான வினாத்தாள்கள் மற்றும் பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகள் யாவும் தரைவழிப் பாதையூடாக எடுத்து வரப்பட்டு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலுள்ள பரீட்சை இணைப்பு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களுக்குத் தேவையான வினாத்தாள் மத்திய இணைப்பு நிலையத்திலிருந்து அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி தெரிவித்தார். (உ-9)

## விளையாட்டு வீரர்களுக்கு வெளிநாட்டவர் பயிற்சி

(கொழும்பு)

நாட்டில் சகல விளையாட்டுத் துறைகளிலும் உள்ளவீரர்களின் திறமைகளைமேம்படுத்தும் நோக்கத்துடன் வெளிநாட்டுப் பயிற்சியாளர்களின் உதவி பெற்றுத் தரப்படும் என்று இளைஞர்கள் விளையாட்டு அமைச்சர் யோன்ஸ்ரன் பெர்னாண்டோதெரிவித்தார்.

இவ்வருடம் நடந்த பாடசாலை விளையாட்டுவிழாவில் தமது திறமையைக் காட்டிய வீரர்களை கௌரவிக்கும் வகையில் மகரகம தேசிய இளைஞர் மன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (உ-4)

## தனிநாட்டுக் கோரிக்கையை விடுதலைப்புலிகள் கைவிட்டுள்ளனர்

### மாவீரர்தினஉரைகுறித்து ராய்ட்டர்கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு கணிசமானபிராந்தியசுயாட்சியுடன் உடன்பட முடியும் என்று விடுதலைப்புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளார்கள் என்பதை உறுதிசெய்யும் ஒரு உரையாக அது அமைந்துள்ளது என ராய்ட்டர்செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி உரை குறித்து மேற்படி செய்தி ஸ்தாபனம் மேலும் கருத்துக்கூறுகையில், தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னேற வேண்டும். சகல சமூகத்தினரும் ஐக்கியத்துடன் சகவாழ்வு வாழவேண்டும் என்பதே தமது இயக்கத்தின் ஆழ்ந்த விருப்பம் என அதன் தலைவர் பிரபாகரன் கூறுகிறார்.

இனப்பிரச்சினைக்கு அமைதியான வழியில் ஒரு தீர்வு காணும் பாதையில் நேர்மையுடனும், உண்மையுடனும் நடந்து கொண்டு அனைத்து முயற்சிகளையும் தமது இயக்கம் மேற் கொள்ளும் என அவர் வலியுறுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளது. (உ-4)

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்
குறள்

# வலம்புரி

## பிரபாவின் உரை

சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருந்த தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினஉரை நேற்று முன்தினம் இடம்பெற்றது. தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் தெளிவான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

'தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி தம்மைத் தாமே ஆளுவதற்கு உரித்துடையவர்கள் இதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக்கூடாதென்பது பிரபாகரனின் உரையில் முக்கிய விடயமாகும். அத்துடன்சுயநிர்ணயத்துடன் கூடிய பிரதேச சுயாட்சி முறையை முன்வைத்தால் அதனை விடுதலைப் புலிகள் சாதகமாகப் பரிசீலிக்கத் தயார் என்பதையும் பிரபாகரன் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

தலைவர் பிரபாகரனின் இவ்வுரையிலிருந்து இலங்கையில் சமாதானம் ஏற்படுவதென்பது இலங்கை அரசின் கையில் தங்கியுள்ளது.

அதாவது இலங்கை அரசு தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு எவ்வளவு தூரம் மதிப்பளிக்கப் போகிறது, தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமையுடன் தம்மைத் தாமே ஆளுகை செய்வதற்கு இலங்கை அரசு அனுமதிக்குமா என்பதை பொறுத்தே நாட்டில் ஒற்றை ஆட்சியா அல்லது பிரிவினையா என்பது தீர்மானிக்கப்படும். இதில் எந்தப்பக்கம் என்ற முடிவை எடுக்கும் சந்தர்ப்பம் அரசிடமேயுண்டு என்பதைப் பிரபாகரன் மிகத் தெளிவாகக்கூறியுள்ளார்.


அதேவேளை ஈழத் தமிழர்களின் போராட்டம் குறித்து வெளிநாடுகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் பற்றி தலைவர் பிரபாகரன் தமது உரையில் குறிப்பிடத் தவறவில்லை.

இன்று உலகம் மாறி வருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகிறது. உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தத்தை, புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. உலகப்போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன் நகர்த்திச் செல்வதே விவேகமானது என்று கூறியிருப்பதன் மூலம் ஈழத் தமிழர் விடயத்தில் சர்வதேச நாடுகளின் நிலைப்பாடு எத்தகையதென்பதைப் புரிய முடிகிறது.

# அன்னை பராசக்தியின் அருள்பெற்ற பாவலரின்

# பைந்தமிழ்ப் பாடல்கள் பரவசமூட்டவல்லன

## வெள்ளி நற்சிந்தனை



எங்கும் எதிலும் சக்தியடா என்ற பாவரி போல் நீங்கமற நிறைந்திருப்பவள் அன்னை பராசக்தி. அவளின்றி ஆவது ஒன்றுமில்லை என்றார் தமிழ் ஆகமத்தை இத்தரணிக்குத் தந்த திருமூல நாயனார். அவர்கூற்றுப் போல அனைத்திலும் நிறைந்த அன்னை பராசக்தியை சைவ உலகம் உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றியது.

### திருமூலர் ஆகமம்

பைந்தமிழ் மொழியாம் எம் செந்தமிழ் மொழியில் பாட்டிசைத்த பாவலர்களெல்லாம் தம் பாவாலே அன்னை பராசக்தியைக் கொஞ்சிக் குலாவி தமிழ் நாதம் செய்ததை இத்தரணி மறந்துவிடாது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே அற்புதத் தமிழ் ஆகமத்தைத் தந்த திருமூலர் அன்றே அவளை அறியா அமரருமில்லை, அவளின்றிச் செய்யும் அருந்தவமும் இல்லை. அவளின்றி ஆவது ஒன்றுமில்லை எனசக்தியின்பேராற்றலை அற்புதத் தமிழிலே தந்தார்.

### கொற்றவை

சங்கப் புலவன் பாலை நிலத்து தெய்வமாய் அன்னை கொற்றவையை வீற்றிருக்கச் செய்து பாமாலை சாத்தினான். அன்பும் அரவணைப்பும் தாய்மையும் உடைய தெய்வம் அன்னை பராசக்தியே என அன்றே பாவலர்கள் பாருக்குப் பறை சாற்றினர். சங்கப்புலவர் மரபில் நனைந்து போன சால்புடைய புலவர்கள், பின் தோன்றி பத்தினிப் பெண்கள் எல்லாம் பராசக்தியின் அம்சம் என்றார்கள். இளங்கோவின் கண்ணகியும், கம்பனின் கற்புக் கணிகலமான சீதையும் பராசக்தியின் அற்புத பிறப்பென்பது காவியம் படைத்த கவிவாணர் புனைந்துரை.

### கம்பனின் அந்தாதி

பாட்டுடைத் தலைவனாக இராமனை வைத்து பாக்கள் சமைத்த கம்பன் அன்னை பராசக்திக்காய் அந்தாதியை இவ்வையகத்துக்குத் தந்து புகழ் சேர்த்தான். சொல்லுக்குள் வாக்கியத்தைச் சுருக்கி வைத்த தமிழ்ப் புலவன் எனப் புகழ் பெற்ற கம்பன் சுந்தரத் தமிழிலே அந்தாதி என்னும் அணிகலன் சூட்டினான்.

ஆய கலைகள்
அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும்
என்னம்மை- தூய
உருப்பளிங்கு போல்வாள்
என் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு
வாராதிடர்'

என்று பாடினார்.

எனசக்தியை கொஞ்சிக்குலாவினார்.

### அபிராமிப்பட்டர்

குமரகுருபரர் போலவே அன்னை அபிராமி மீது அளவற்ற பக்தி கொண்ட அபிராமிப்பட்டர் அற்புதத்திருவந்தாதி பாடிய அருந்தமிழால் அன்னை பராசக்தியை உள்ளம் உருக வர்ணித்தார்.

'உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர் 'என்று தொடங்கி100 பாடல்களை தேன்தமிழிலே தந்தார். அன்னைக்காய் அந்தாதி பாடியபட்டர். அணு அணுவாய் அம்பாளை அன்னையை தன்பாவாலே விளித்துச் சொன்ன பட்டர்,

கலையாத கல்வியும், குறையாத வயதும் ஒருகவடு வராத நட்பும் கன்றாத வளமையும், குன்றாத இளமையும் கழுபிணியில்லாத உடலும், சலியாத மனமும், அன்பகலாத மனைவியும் தவறாத சந்தானமும், தாளாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வராத கொடையும், தொலையாத நிதியும், கோணாத கோலும், ஒரு துன்பமில்லாதவாழ்வும் துய்ய நின்பாதத்தில் அன்புதவி பெரிய தொண்டரோடு கூட்டுகந்தாய், அலை யாழி அறிதுயிலுமாயனது தங்கையே ஆதிக்கட வூரின் வாழ்வே, அமுதீசர் ஒருபாகமகலாத அருள் வாமி அபிராமியே என்று போற்றிப் பாடினார்.

### பாரதி பாமாலை

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் என்று பாடினார். பாரதியார், அன்னை பராசக்திமேல் எத்தனையோ பாமாலை சாத்தினார். கவிதை வரிகளில் நல்லதோர் வீணை செய்து அதை நலன் கெடப் புழுதியில் எறிவதுண்டோ சொல்லடி சிவசக்தி என்னைச் சுடர் மிகு அறிவுடன் படைத்து விட்டாய். வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயன் பெற்று வாழ்வதற்கே'' என்று பாடினார். இன்னுமொரு முறை வேண்டுகையில் காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும். அங்கு தூணில் அழகியதாய் நன்மாடங்கள் துய்ய நிறத்தினதாய் காணி நிலத்திடையே ஒரு மாளிகை கட்டித் தர வேண்டும். என்று பாடிச் சக்தியின் அருளை விளக்குகிறார். ✶

## ★ அபிராமிப்பித்தன் ★

பேசாப் பிறவியாய் பிறந்து சக்திமேல் பித்தனாய் பக்தி கொண்டு நித்தமும் பூமாலை சாத்திய குமரகுருபரனை பார் போற்றும் பாவலனாக்கியவள் அன்னை பராசக்தி. தன் நாவசைத்த நாயகியாம் சரஸ்வதிக்கு சகல கலாவல்லியாம் எனப் பாடி நன்றிக்கடன் செலுத்திய புலவன் குமரகுருபரன்.

சொல்விற் பனமும் அவதானமும் கவிசொல்ல வல்ல நல் வித்தையும் தந்து அடிமை கொள்வாய்நளினாசனஞ்சேர் செல்விக் கரிதென்றொருகால முஞ் சிதையாமை நல்குங்கல் விப்பெருஞ் செல்வப்பேறே தாரு ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை 'என உள்ளம் நெகிழ வர்ணித்தார்.

பட்டரின் பாவரிகள் அத்தனையும் கேட்பவர்கள் இதயத்தை ஈரமாக்கும் இனிய பாவரிகள். இப்பாவரிகளில் சக்தி தத்துவமுண்டு சக்தி சஞ்சலம் தீர்க்கும் சரித்திரம் உண்டு.

'பூத்தவளே புவனம்பதின் நான்கையும் பூத்த வண்ணம் காத்தவளே பின் சரந்தவளே'

எனசக்தி தத்துவத்தை

## ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை ஒளிவிழா நிகழ்வுகள் இன்று மு. ப. 9மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் அருட் கலாநிதி அன்ரன் மத்தாயாஸ் பிரதம விருந்தினராகவும், இலங்கைத் திருச்சபையின் யாழ்ப்பாண குரு முதல்வர் நேசகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த- 5)

## குடிக்கும் நீருக்காக மாணவர் அலைச்சல்

(சுதுமலை)

ஆனைக்கோட்டையில் தற்காலிகமாக இயங்கிவரும் மயிலிட்டி றோ. க. த. க. பாடசாலைமாணவர்கள் குடிநீரைப்பெறுவதில் பல்வேறு இடைஞ்சலகளைஅனுபவித்து வருகின்றனர்.

மேற்படி பாடசாலை தற்காலிகமாக அமைந்துள்ள தனியார் வீட்டுவளவுக்கிணற்றினுள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் அது பாவனைக்கு உகந்தது அல்லாததாகக் காணப்படுகிறது.

இதனால் குடிநீரைப் பெறுவதற்கு மாணவர்கள் அயலில் உள்ள வீடுகளை நாடிவருகின்றனர்.

(உ-252)

## விடுதலைப் புலிச் சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

இராணுவ சிப்பாய்களைப் புகைப்படம் எடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில்கடந்த 2001 ஆம்ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம்திகதிவவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட புலிகள இயக்கத்தின் படப்பிடிப்பாளர்எனக்கருதப்பட்ட கருப்பையா தவராசா என்பவரை விடுதலை செய்யுமாறு உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இராணுவத்தினர் சிலரின் புகைப்படங்கள் காணப்பட்டதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்ட பின் கடுமையான சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

தனது கைதுக்கு எதிராக மேற்படி நபர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தவழக்கு பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் ஜே. ஏ. என். டி. சில்வா, டீ. பீ. வீரசூரியா ஆகியோர் முன் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டது.

தவராசா தனது மனுவை சட்டத்தரணி வி. லோகேஸ்வரன் மூலம் தாக்கல் செய்திருந்தார். விசாரணையின் பின் நீதியரசர்கள் தகுந்த ஆதாரமில்லாத காரணத்தினால் மனுதாரரை விடுதலை செய்து தீர்ப்பளித்தனர்.

(உ)

## வருடாந்த ஞான ஒடுக்கம்

(யாழ்ப்பாணம்)

புனித- மரியாயின் சேனையின் வருடாந்த ஞான ஒடுக்கம் (ஒருநாள் தியானம் கடந்தவாரம் யாழ். சுண்டுக்குளி புனித- யுவானியார் (முழுக்கு அருளப்பர்) ஆலயத்தில் கொமிசியத் தலைவர் சகோதரர் எம். ஏ. பிரகாசராசா தலைமையில் பக்தி பூர்வமாக நடைபெற்றது.


(உ)

## தினசரி தியானம்

### ஜெபம்

ஜெபம் முடிந்த உடனேயே அந்த இடத்தை விட்டு அகன்று விடாதீர்கள். மற்றவர்களுடன் கலந்து விட வேண்டாம். உலக நடைமுறைகளில் மூழ்கி விடாதீர்கள். ஒரு பத்துநிமிடமாவது சிலபிரார்த்தனைப் பாடல்களை உச்சரித்துக் கொண்டாவது இறைவனையும் அவனுடைய எல்லையில்லா அன்பையும் நினைத்துக் கொண்டாவதுஅமைதியாக இருங்கள். பிறகுமனப்பூர்வமான பயபக்தியுடன் அவ்விடத்தைவிட்டு அகன்று, வழக்கமான பணிகளைத் தொடங்குங்கள்.

சுவாமி சிவானந்தர்





இந் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும், பத்திரிகையாளர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பேட்டியளிப்பதையும் படங்களில் காணலாம்.





நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸாரையும், ஈ.பி.டி.பியினரை வெளியேறக்கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபடும் பொது மக்களையும் படங்களில் காணலாம்.

## ஈபிடிபி வெளியேறும்...

எமக்கு மறைமுகமாக நெடுந்தீவுப்பகுதி மக்கள், எம்மில் உள்ள அன்பு காரணமாக உணவு தருகின்றனர். இத்தன்மை நாம் நெடுந்தீவில் இருப்பதை மக்கள் விரும்புவதையே எடுத்துக் காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் அரசியல் பணியில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே, கட்சி சார்ந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் தூண்டிவிடப்பட்டன.

இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் இருந்து எம்மைப் பாதுகாக்கவே பொலிஸார் கடமையில் இருக்கின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ-6,7)

## ஈ.பி.டி.பி...

தாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில இருந்து முற்றாக வெளியேறும் வரை தமது போராட்டம் தொடருமென்றும், அவர்கள் உறுதி படத் தெரிவித்தனர்.

ஈ.பி.டி.பியினரின் வருகை தமது நிம்மதியான வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாகவும், அவர்களை வெளியேற்ற உதவ வேண்டுமென்றும் அம்மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை நெடுந்தீவில் முகாமிட்டிருக்கும் ஈ.பி.டி.பியினருக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கிவருகின்றனர்.

போராட்டம் காரணமாக அப்பகுதியின் இயல்பு நிலைமை மோசமாகப் பாதிப்படைந்துள்ளதுடன் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் கடைகள்,சந்தைகள் எதுவும் செயற்படாததால் அங்கு பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள அசா

## நெடுந்தீவு மக்களுக்கு ஓட்டோ அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களின் பயன்பாட்டிற்கென இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். கணேசலிங்கத்திடம் முச்சக்கர வண்டி ஒன்றைக் கையளித்துள்ளார்.

நெடுந்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் இதனை வழங்கினார்.

மக்களின் பயன்பாட்டிற்காக மேலும் இரண்டு முச்சக்கர வண்டிகளை மிக விரைவில் தருவதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் மக்களிடம் உறுதியளித்தார். (இ-6,7)

## தமிழ்ச்செல்வன்...

பிரதிநிதிகள் இருவரையும் விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள், பொது மக்கள் பெருமளவில் திரண்டு வழியனுப்பி வைத்தனர்.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள முதற்கட்ட மூன்றாம் சுற்றுப பேச்சு வார்த்தைஅடுத்தமாதம் 2ம் திகதி திங்கட்கிழமை ஒஸ்லோவில் நடை பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## பரு.பிரதேச...

மு.ப. 10மணி வரை இடம் பெற்ற இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் திரண்டிருந்தனர்.

மேற்படி மறியல் போராட்டம் காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலகப் பணிகள் மு.ப 10மணிவரை இடம் பெறவில்லை.

## ஜனாதிபதி...

ஜனாதிபதி சந்திரிகாவுடன் முன்னாள அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பிரசன்னமாகியிருந்தார். நேறறைய சந்திப்பின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைபபுலிகள் அமைத்து வருகின்ற காவல்துறை நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்கள்மற்றும் வங்கிளை மூடி விடுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டதை ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள இத்தகைய காவல் துறை நிலையங்கள், நீதிமன்றங்கள, வங்கிகள் ஆகியவற்றையும் விடுத்லைப் புலிகள் மூடவேண்டும் என்றும் இதற்கான உத்தரவை விடுக்குமாறும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்றைய சந்திப்பின் போது கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியின் இவ் வேண்டுகோளுக்குப் பதிலளித்த பிரதமர் பல வருடங்களாகவே விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேற் கூறப்பட்ட நிறுவனங்களை நடத்தி வருவதாகத் தெரிவித்தார். இதனை மறுத்த ஜனாதிபதி சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறை, நீதிமன்றங்கள், வங்கிகள் தொடர்பான செய்திகள் தற்போதே தெரிவிக்கப்பட்டு வருகின்றன என்று கூறினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் முத்தரப்பினர் மட்டுமே கலந்து கொள்கின்றனர். இந் நிலை மாற்றப்பட்டு சமாதான முன்னெடுப்புக்களில் அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ளும வகையில் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் ஒஸ்லோ பேச்சுவார்த்தையின் போது அமெரிக்கப்பிரதி ராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆம்டேஜ் கூறியிருந்த கருத்துக்கும் தனது கருத்துக்கும் உள்ள ஒற்றுமையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற சந்திப்பு காரசாரமான கருத்துப் பரிமாற்றங்களுடன் இடம்பெற்ற போதும் சந்திப்பு சுமுகமான முறையில் இடம் பெற்றதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## அமைச்சர் மிலிந்த நாளை இந்தியா பயணம்

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடை பெற்ற இலங்கைககான உதவி வழங்கும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் பற்றி விளக்கிக் கூறும் பொருட்டு அமைச்சர் மிலிந்த மொறகெட நாளை சனிக்கிழமை அவசரமாக புதுடில்லி செல்லவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்த அமெரிக்கா, பிரிட்டன் உட்படசுமார் 40 நாடுகள் கலந்து கொணட ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பஙகுபற்றவில்லை. இதனையடுத்தே அமைச்சர் மிலந்த மொறகொட ஒஸ்லோ மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக இந்தியா செல்லவுள்ளார். (ம)

### இந்தியவில் தங்கியிருக்கும்

## ஈழத் தமிழ் அகதிகளை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

(நமது நிருபர்)

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியுள்ள வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களைமீளவும் அவர்களது பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் இணக்கத்தை அடுத்து இலங்கைத் தமிழ் அகதிகளை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயம் மேற் கொண்டுள்ளது.

இதன முதற் கட்டமாக அகதிகளை கப்பலில் காங்கேசன் துறைத் துறைமுகத்தினூடாக அழைத்து வருவதற்கும் முதலில்அவர்களை இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைத்தபின்னர்சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.(ம)

நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்தே அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்ஆகியோருடன் தமிழ்சிங்களப பத்திரிகையாளர்களும் அங்கு சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளை மக்களுடன் கலந் துரையாடலில் ஈடுபட்ட அமைச்சர் தி.மகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர்,என்.ரவிராஜ் ஆகியோர், நெடுந்தீவுப் பகுதி மக்களின் பிரச்சினை குறித்து பாராளுமனறில் விவாதிப்பதாகவும், விரைவில் போராட்டத்திற்கு ஒரு நல்ல முடிவு கிட்ட அரச உயர்மட்டத்தினருடன் கலந்துரையாடுவதாகவும் உறுதியளித்தனர்.

(இ-6,7)

செயல்கப் பணிகள் மு.ப 10மணிவரை இடம் பெறவில்லை.

மறியல் போராட்ட முடிவில் பருத்தித்துறை கடற்றொழிலாளர் சங்கம் சார்பாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் எஸ்.சிவசுவாமியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது.

அதில் குறுகிய காலத்தில் தமக்கோர் நல்ல முடிவு அறிவிக் கப்படாத பட்சத்தில் தமது போராட் டத்தினை குடாநாடு தழுவியதாய் விஸ்தரிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது. இதேவேளை,பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில்சுமார் 120 வீடுகளில் படையினர் நிலை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-41,23)

## Tender for Supply and Installation of Washing Machine

Tenders are hereby called from suitable suppliers for supply and installation of Industrial Washing Machine with driving facilities at a capacity of 50 kilos. The Tenders will be accepted till 10/12/2002 up to 10.00 am at the details of the Washing Machines are given below:

Capacity -50 Kilos

Size -1 metre diameter and 2 metres length

Suitable for washing bed sheets, checked cloths,towels and Pillow covers.


The Tender should be either posted or put it to the Tender Boards on or before 10/12/2002 at 10.00 am.

Dr.S.Sathurmugam,
Director,
G.H.Jaffna.



## சுயமாகத் தொழில் செய்யுங்கள்

வீட்டில் இருந்து குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக்குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக் கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிண்டிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர்.




யாழ். நகரில் உள்ள தமிழ் மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலை கற்றுக் கொடுக்க தென்தமிழகத்திலிருந்து R.பரதன் (அச்சுக்கலை நிபுணர்) யாழ். நகருக்கு வருகைதந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழு விபரம், இதன் பயன் பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில் வந்து சந்தித்து பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி மூன்று நாள்கள் மட்டுமே. பயிற்சிக்குப் பின்பு தொழில் தொடங்கலாம். சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன் மூலம்,

பிளாஸ்டிக் பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்ரர், திருமண அழைப்பிதழ், முதலியன பிரிண்டிங் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை யாழ். நகரமக்கள் பயன்படுத்திக் கொள்ளவும். பயிற்சியில் வயது வரம்பு தேவையில்லை.

இறுதிப் பிரிவு
02.12.2002இல்
ஆரம்பம்

நேரில் தொடர்பு முகவரி:-

**CAREER .COM INSTITUTE**

**79, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:- 0777 706334**

## சான்றிதழ் வழங்கல்

ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

**இடம்: நாவலர் மண்டபம்.**
**காலம்: 05.12.2002 பி.ப.2.00மணி**

இந் நிகழ்விற்கு பழைய மாணவர்கள்,நலன் விரும்பிகள் அனைவரையும் .
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

[C/5370]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 29.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.